“ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்”


# கலசம்
# KALASAM

ஆடி - ஆவணி - புரட்டாதி 1997

**இலண்டன் ஸ்ரீமுருகன் தேர்த் திருவிழாச் சிறப்பிதழ்**



லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆத்மீகக் காலாண்டிதழ் £1.00



வரும் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை விம்பிள்டன் விநாயகப் பெருமானது
தேர் மகோற்சவம் சிறப்புற எமது வாழ்த்துக்கள்.

சிறப்புச் செய்தி: பக்கம் 53

ஆசிரியர்: திரு மு. நற்குணதயாளன் துணை ஆசிரியர்: திரு க.ஜெகதீஸ்வரன்
நிர்வாகப் பொறுப்பு : திரு வ.இ. இராமநாதன், துணை நிர்வாகம்: திரு. சிவ. அசோகன்
நிர்வாகக்குழு:
திரு. மாணிக்கம் சுரேஷ், திரு. இ. முருகதாசன், திரு. ந. சிவராசன்
திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம், திரு சி. அற்புதானந்தன், திரு. பொ. சுந்தரலிங்கம்
வெளியீடு:
**சைவ முன்னேற்றச் சங்கம் (பிரித்தானியா)**
தொடர்பு முகவரி:
KALASAM, 42 Stoneleigh Road, Clayhall, Ilford, IG5 0JD, England
Tel : 0181 550 4233

ஈசன்நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

மணி 5 **கலசம்** ஒலி 19

**KALASAM**

ஆடி - ஆவணி - புரட்டாதி 1997

# அழுவோமா? சிரிப்போமா?

திருமுருகன் பவனிவரும் இன்றைய வேளையில், கலசத்தின் 19ஆவது இதழும் உங்களின் கைகளில் தவழ்ந்து கொண் டிருக்கிறது. பல ஆழமான கட்டுரைகள் ஆய்வுபூர்வமான செய்திகள் இம்முறை கலசத்தை அலங்கரிக்கின்றன.

கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம் என்னும் ஆன்றோர் வாக்கு மனதை நெருடிக் கொண்டிருக்கின்றது. நாட்டிற் போர்மேகங்கள் பரவிய பின் ஆலயங்கள் பல அழிந்துவிட்டதைக் காதால் கேட்டிருக்கின்றேன். நெஞ்சுக்குட் துடித்திருக்கிறேன். பதறிப் பதைபதைத்து வேதனையாற் புலம்பியிருக்கின்றேன். அழுவோமா? சிரிப்போமா? என்று அந்தரப்பட்டு ஆடிப்போயிருக்கிறேன். ஆனாற் காதாற்கேட்ட அந்த நிகழ்வை, நிஜமாகப் படங்களிற் பார்த்தபோது என்ன செய்வது? ஏது பண்ணுவது? என்று எனக்குப் புரியவேயில்லை.

ஏன் ஆண்டவா! உனக்குக் கூடவா புரியவில்லை? உன் மனையை அவர்கள் இடித்தபோது நீ என்ன செய்து கொண்டிருந்தாய்? எங்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருந்தாயா? அல்லது எங்களது துடிப்பைப் பரிசோதிப்பதற்காக கண்டும் காணாமல் இருந்தாயா?

இறைவா நீ எம்மைப் படைத்தாய்! என்மைப்போற் பலரைப் படைத்தாய்! பாதுகாத்தாய்! உணவு தந்தாய் ! உடை தந்தாய்! ஏன்? எங்களுக்கு எல்லாமே நீதானே தந்தாய்! ஆனால் உன்னால் உனது மனையை மட்டும் பாதுகாக்க முடியவில்லையே இறைவா!! ஏன்?

சரி உன்னை விடு! நாங்கள் என்ன செய்தோம்! நன்றாக உண்டு, உடுத்து அரட்டைகள் அடித்துச் செய்யாத வேலைகள் எல்லாம் செய்து காலத்தைக் கடத்துகிறோம்! உணர்வை இழந்து உலகை மறந்து போட்டி பொறாமைகளுள் அவிந்து, படைத்தவனை மறந்து பாரில் பெரியவர்களாக உலவி வருகிறோமே! ஏன்? இறைவா நீதான் எல்லாம் என்று நாழும் பொழுதும் அரற்றும் நாங்கள், உன் மனை- எங்கள் வழிபாட்டுத்தலம் அழிக்கப்பட்டபோது வாழாவிருந்தோமே!! இது உனது திருவிளையாடலா அல்லது எமது விதியா? எதையும் புரிந்து கொள்ள முடியவில்லையே இறைவா! உனது ஆலயங்கள் அழிந்தமை உனது விதியென்றும் நாங்கள் எண்ணலாமா?

போர்மேகம் கலைந்து அமைதி தோன்றப் போவதற்கான அறிகுறியாக இவற்றைக் கொள்வதா?நீ பெரியவன், நான் பெரியவன் என்று எண்ணிப் போட்டி போட்டுக் களைத்துப் போய் இறுதியில் உன் மனை தேடி நாம் வரும்போது மனையும் இல்லை, நீயும் இல்லையே!! ஏன் இறைவா ?

**இறைவா உன் பாதங்களில் சரணடைகிறேன். எப்படியாவது இதனை மாற்றிவிடு!! அப்படி விதியில்லை என்றால் புதிய விதியொன்றை உண்டாக்கு இறைவா!!!**

**ஓம் நமசிவாய**

**- ஆசிரியர் -**

# செந்தமிழ்ச் சிறுவன் நீயே!!

தந்தையும்தாயும் தலைசிறந்தோரெனத் தரணிக்கு
தெளிவித்த ஔவை தரிசித்த சிறுவனும் நீயே
சிந்தை மகிழச் சிவனுக்கே சிறந்த நல்வேதத்தை
செப்பிய செந்தமிழ்ச் சிறுவனும் நீயே!
முந்தை யுரைத்த வேதமொழியும் நல் மூதுரையும்
முத்தமிழும் மங்காதிம் மண்ணில் காக்கு முமைபாலா
விந்தைக்குமாரா வினை தீர்க்கும் வித்தகா ஸ்ரீமுருகா
வள்ளிமணாளா உன்பாதம் போற்றி! போற்றி!

இன்னரிய இந்துக்களை ஈடேற வழிவகுத்து
இயலிசை நாட்டியங்கள் இனிதே நிறைவேற்றி
கன்னித்தமிழும் கலைசேர் நற்பண்பும் பேணிக்காத்து
காதுக்கினிய கீதங்கள் தொனிக்க வைத்து
தொன்மரபு குன்றாத் திருமணங்கள் நிறைவேற்றும் திருப்பதியில்
தூய தமிழினத்தைத் தாயெனத் தாங்கியிங்கே
மின்விளக்கும் நெய்விளக்கும் மங்காத மண்டபத்தில்
மாட்சியுடன் வீற்றிருக்கும் லண்டன்முருகா போற்றி! போற்றி!

முக்காலம் உணர்ந்தவனே மூதறிஞர் மனைவிளக்கே
முற்றாகப் போரையும் முடிவாக்க வல்லவனே
எக்காலம் வந்தாலும் எழில்சேர் தமிழ்நிலங்கள்
என்றும்அழியாது காப்பாற்ற இயன்றவனேயெட்டுத்
திக்காலும் வருந்துயரம் தாங்கித் தரித்தெங்கள்
தொன்பெருமை மீட்டுத் தூய வளந்தரவல்ல
இக்காலக் கலிவரதா எம்மின இடும்பை யகற்றுமையா
இரும்பனி நாட்டுறை முருகாஈடேற இரங்குமையா

- செ. நாகேந்திரன் -

# அருள் தரும் பைரவர்

இறைவன் ஐந்து முகங்களுடன் பல அருளைக் காட்டியிருக்கிறான். ஸத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்ற மூர்த்தி பேதங்களில் பைரவரும் ஒருவர்.

சிவாம்சமான பைரவமூர்த்தி உலகம் எங்கும் வியாபித்து இருப்பவர். நிர்வாண ரூபம், மூன்று கண்கள், சர்ப்ப ஆபரணம், குண்டலம், சிரசில் மாலை, கட்கம், சூலம், கபாலம், உடுக்கை, கோரப்பல், நாய் வாகனம், இவரே பைரவர். வாக்தேவியின் அருளுடன் கூடிய இவர் கேட்பதைத் தரும் அருளுடையவர்.

நமது ஆலயங்களில் பைரவருக்குத் தனிச் சந்நிதி உண்டு. உதயகால பூசை தொடங்கு முன்னும் இரவு அர்த்த ஜாமபூசைக்குப் பின்னும் பைரவரை பூசை செய்து, கோயில் காவலை பைரவரிடம் ஒப்படைப்பது வழக்கம்.

பைரவரை அஷ்ட பைரவர் என்று நூல்கள் குறிப்பிடுகின்றன. அவை கால பைரவர், கல்பாந்த பைரவர், க்ரோதந பைரவர், ஸம்கார பைரவர், உந்மத்த பைரவர், சண்டபைரவர், உக்ர பைரவர் ஆகியவை.


திருவண்ணாமலை, பட்டீஸ்வரம் முதலிய ஆலயங்களில் பைரவரின் சிற்பம் மிக அழகானது. காசியில் உள்ள கால பைரவர் சந்நிதி மிகப் பிரசித்தி பெற்றது. காசிக்குச் சென்றவர்கள் இரவு காலபைரவ பூசை பார்க்காமல் திரும்புவதில்லை. காலபைரவர் காசி நகரத்தின் சேனாதிபதி.

காலனின் அதிகாரம் பைரவர்களுக்குக் கிடைத்ததால் காலபைரவர் என்று அழைக்கப் படுகிறார்.

சீர்காழியில் பைரவருக்கு வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு மேல் அபிஷேகம். கூரையிலுள்ள பைரவரின் நேர்ப்பார்வையில் கீழே உள்ள பலி பீடத்திற்கு அபிஷேக ஆராதனை முடிந்து பிறகு படியேறி மேலே சட்டை நாதருக்குப் புனுகுச் சட்டம் வடைமாலை சாற்றுவார்கள். இந்த ஆலயத்தில் நவக்கிரகஹ தேவதைகள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நிற்பது அதிசயமாகும். ஈஸ்வரனும் ஈஸ்வரியும் பெரிய திருமேனியுடன் புன்னகை பூத்த திருமுகத்துடன் வீற்றிருப்பதும், இந்த ஆலயத்தின் பெருமைக்குச் சான்று.

காலத்திற்கு அதிபதியான கால பைரவரை நல்ல நியமத்துடன் வழிபட்டால் மனோதைரியமும், சாந்தியும் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

# லண்டனில் பைரவர் பிரதிஸ்டை



லண்டனிலுள்ள ரூட்டிங் முத்துமாரியம்மன் ஆலயத்தில் பைரவர் விழாவின் போது பிரதிஸ்டை செய்யப்பட்ட திருவுருவத் தையே மேலே காண்கிறீர்கள்

# எங்கள் தமிழ் மண்ணில் எத்தனை ஆலயங்கள்!!!

**சிவன்கோவில்**
காங்கேசன்துறை–பருத்தித்துறை வீதி, வல்வெட்டித்துறை

**முச்சம்புலவு சிவன்கோவில்**
வல்லிபுரக் குறிச்சி

**மருதடி தான் தோன்றீஸ்வரர் கோவில்**
வல்லிபுரக் குறிச்சி

**ஸ்ரீ முதலியம்பாள் கோவில்**
புலோலி தெற்கு

**காளிவயல் வீரகத்திப் பிள்ளையார் கோவில்**
குடத்தனை மேற்கு, காளிவயல், பருத்தித்துறை

**ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோவில்**
அம்பன், பருத்தித்துறை

**திருச்சிற்றம்பலப்பிள்ளையார் கோவில்**
நெடியகாடு, வல்வெட்டித்துறை

**அருள்மிகு விநாயகர் கோவில்**
மந்திகை வைத்தியசாலை, பருத்தித்துறை

**அத்தியடிப் பிள்ளையார் கோவில்**
அத்தியடி, பருத்தித்துறை

**குளக்கோட்டு விநாயகர் கோவில்**
நுணுவில், துன்னாலை தெற்கு

**குருக்கட்டுப் பிள்ளையார் கோவில்**
வல்லிபுரக் குறிச்சி

**ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில்**
ஆத்தியவத்தை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை

வாசகர்களே எங்கள் மண்ணிலுள்ள ஆலயங்களில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வடமராட்சி — பருத்தித்துறை பகுதியிலுள்ள ஆலயங்களைத் தந்திருக்கின்றோம். இவ்வாலயங்களின் தற்போதய நிலை எமக்குத் தெரியாது. ஆதலால் இவை சம்பந்தமான தற்போதய நிலவரங்களைத் தந்துதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்
— ஆசிரியர் —.

**கணக்கிலாவத்தை ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்**
தும்பளை, பருத்தித்துறை

**ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்**
உப்புக்கிணற்றடி, பொலிகண்டி, பருத்தித்துறை

**ஆலடிப் பிள்ளையார் கோவில்**
கல்லூரி வீதி, பருத்தித்துறை

**வல்லியானந்தப் பிள்ளையார் கோவில்**
துன்னாலை வடக்கு

**கனகராவுப் பிள்ளையார் கோவில்**
சாவகச்சேரி வீதி

**ஆயிலடிப் பிள்ளையார் கோவில்**
குடத்தனை மேற்கு, குடத்தனை

**பெரியவளவு, ஸ்ரீ வரத விநாயகர் கோவில்**
தும்பளை மேற்கு, பருத்தித்துறை

**மாயக்கைப் பிள்ளையார் கோவில்**
அல்வாய் வடக்கு, அல்வாய்

**நெடியகாடு பிள்ளையார் கோவில்**
பருத்தித்துறை

**ஸ்ரீ தெணிப்பிள்ளையார் கோவில்**
2ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை

**கப்பலுடையவர் (விநாயகர்) கோவில்**
கப்பலுடையவர் ஆலய வீதி வல்வெட்டித்துறை, பருத்தித்துறை

**தச்சன் கொல்லைப் பிள்ளையார் கோவில்**
பிரதான வீதி, தொண்டைமானாறு

**கொட்டடிச் சித்தி விநாயகர் கோவில்**
பிரதான வீதி, பருத்தித்துறை

**சின்னப்பிள்ளையார் கோவில்**
வி.மு. வீதி, பருத்தித்துறை

**தம்புருவளை ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்**
தும்பளை, பருத்தித்துறை

**ஸ்ரீ பிள்ளையார் கோவில்**
கரையூர் வீதி, குடத்தனை

**செல்வச் சந்நிதி, ஸ்ரீ கந்த சுவாமி கோவில்**
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு

**முருகையா கோவில்**
புலோலி தெற்கு

**கந்தவனம், சுப்பிரமணிய சுவாமி கோவில்**
பொலிகண்டி, வல்வெட்டித்துறை

**முருகையன் கோவில்**
நாகர் கோவில் வடக்கு, குடத்தனை

**இணவொல்லை ஸ்ரீ கந்த சுவாமி கோவில்**
துன்னாலை வடக்கு, துன்னாலை

**ஸ்ரீ கந்தசுவாமி கோவில்**
அம்பன், பருத்தித்துறை

**ஸ்ரீ முருகையன் கோவில்**
வல்வெட்டி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை

**மருதடி ஞானவைரவர் கோவில்**
பிரதான வீதி, பருத்தித்துறை

**ஆதிவைரவர் கோவில்**
ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை

**நெற்கொழு வைரவர் கோவில்**
கெருடாவில் கிழக்கு, கொம்மாந்துறை

**ஸ்ரீ சந்திரசேகர வீரபத்திர சுவாமி** கோவில்
உடுப்பிட்டி

**வீரபத்திர கோவில்**
கந்தவனச் சந்தி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை

**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் (வல்லிபுரக் கோவில்)**
வல்லிபுரக் குறிச்சி, துன்னாலை வடக்கு

**நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவில்**
நெல்லண்டை வீதி, தும்பளை, பருத்தித்துறை

**ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்**
பருத்தித்துறை

**தும்பளை பத்திரகாளியம்மன் கோவில்**
பிள்ளையார் கோவில் வீதி, தும்பளை பருத்தித்துறை

**சுட்டிபுரம் அம்மன் கோவில்**
சுட்டிபுரம் , வரணி

**கோட்டடி அம்மன் கோவில்**
பருத்தித் துறை

**வேவிலந்தை, ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்**
அல்வாய் வடக்கு, அல்வாய்

**கண்ணகி அம்மன் கோவில்**
பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில்

**ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்**
காங்கேசன் துறை, பருத்தித்துறை வீதி, வல்வெட்டித்துறை

**ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்**
கெருடாவில்

**கண்ணகை அம்மன் கோவில்**
நாகர் கோவில்

**தேவரையாளி கண்ணகை அம்மன் கோவில்**
அல்வாய் மேற்கு அல்வாய்

**ஸ்ரீ நாகதம்பிரான் கோவில்**
நாகர் கோவில் தரவை, குடத்தனை

ஒவ்வொரு இதழிலும் தொடரும்...

**P.S. RAGU**

# ☆ STAR MUSIC ☆

**(MAHIL - STORES)**

***Forever and Ever Good Quality***

திரை, இசை
,நட்சத்திரங்களின்
புதிய, பழைய
திரைப்படப்
பிரதிகள்

*** TAMIL * HINDI ***
**MALAYALAM ***

**AUDIO , CD , VIEDO CD, VIEDO AND MAGAZINE DISTRIBUTORS**

வார மாதாந்த
தமிழ்
ஆங்கில
பத்திரிகைகள்
சஞ்சிகைகள்

**247, HIGH STREET NORTH (EAST HAM)**
**MANOR PARK**
**LONDON, E12 6SJ**

**TEL: 0181 472 6084**

**OPEN 7 DAYS A WEEK 11 AM TO 11 PM**

# AYNGARAN ENTERPRISE

# ஐங்கரன் என்ரபிறைஸ்




**(WHOLE SALE AND RETAIL)**

80 Burlington Road ( Opp. DSS Office)
New Malden, Surrey KT3 4NY


உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே இடத்தில் கொள்வனவு செய்வதற்கு இன்றே நாடுங்கள். நம்பிக்கை நாணயம் உத்தரவாதம் இவை எமது தாரக மந்திரம். எம்மிடம் இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் பத்திரிகைகள் சஞ்சிகைகள் ஓடியோ வீடியோ சீடீக்கள் யாவும் கிடைக்கும்

**Tel : 0181 942 1561, 0831 823087**
**Fax : 0181 296 8778**

# இறைவா நீ எங்கு சென்றாய்?









அழிக்கப்பட்ட ஆலயங்களின் காட்சி

# STATION SUPER STORE

உங்களுக்குத் தேவையான
சகலவிதமான மளிகைப்
பொருட்களுக்கும்
பத்திரிகைகள் சஞ்சிகைகள்
ஆகியவற்றுக்கு மனநிறைவோடு
ஈஸ்ட்காமில் நீங்கள் நாடவேண்டிய
நம்பிக்கையும் நாணயமும்
நிறைந்த ஸ்தாபனம்

**6, STATION PARADE**
**EAST HAM E6 1JD**
**TEL: 0181 503 4711**

## திருமணமா? அல்லது விசேட வைபவங்களா?

உங்கள் தேவைகளான
மணவறை, பூமாலைகள், பூக்கொத்துகள்
வீடியோப்படப் பிடிப்புகள்
ஆகியவற்றுக்கு எங்களை அணுகுங்கள்

Our Services extensively cover any part of Europe Garland & Bouquets are made out of fresh flowers. These will be despatched to any part of Europe by air

**For further details contact**
**Ganesh 0181 561 0394 or**
**Siva 0181 574 4463**

# KSP SUPER FOODS

இலங்கையிலும், இந்தியாவிலும் இருந்து தருவிக்கப்பட்ட
அத்தியாவசியப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள்,
பத்திரிகைகள் , சஞ்சிகைகள், ஓடியோக்கள், மற்றும் பழைய புதிய
வீடியோக்கள் அனைத்தும் மலிவு விலையில் மனநிறைவோடு
பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய தரமான
நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

*318, HIGH STREET NORTH*
*MANOR PARK , LONDON E12 6SA*
**TEL: 0181 471 7806**

# இலங்கையின் இந்துப் பாரம்பரியத்தினுட் செல்வச் சந்நிதி பெறும் இடம்.

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

***இலங்கையில் இந்து சமயம்*** என்ற தளப் பொருளை மையமாகக் கொண்டு சிந்திக்கும் பொழுதுதான் நாம் இன்னும் இலங்கையின் இந்துப் பாரம்பரியத்தை தெளிவுற இனங்கண்டு, தொகுத்து எடுப்ப தற்கான புலமை முயற்சிகளை எடுக்கவில்லை என்பது புலனா கின்றது.

இலங்கையின் இந்துப் பாரம்பரியம் பற்றிய ஆய்வு கீழ்க்காணும் பிரதேசங்களில் நிலவும் இந்துப் பாரம்பரியங்களை (வழிபாட்டு நடைமுறைகள் மற்றும் மதப் பண்பாட்டு நடவடிக்கைகள்) பற்றி தொகுப் பாய்வின் அடிப்படையிலே மேற் கொள்ளப்பட வேண்டும்.

**மட்டக்களப்பு பிரதேசம்**
**(அம்பாறை உட்பட)**
**திருகோணமலைப்பிரதேசம்**
**வன்னிப்பிரதேசம்**
**மன்னார் பிரதேசம்**
**யாழ்ப்பாணப்பிரதேசம்**
**மலையகம்**
**மேற்குக்கரையோரப் பிரதேசம்**
**(புத்தளம்,உடப்பு,சிலாபம,நீர்கொழும்பு)**
**தென்பகுதி (கதிர்காமம் உட்பட)**

இப்பிரதேசங்களிலே வாழும் இந்து மக்களிடையே காணப்படும் வணக்கத்தலங்கள் வழிபாட்டு முறைமைகள் பற்றிய ஒரு முழுமையான தரவுத் தொகுதி ஒன்று வேண்டும். அத்தகைய ஒரு தரவுக் களஞ்சியம் இருக்கு மானால், அதில் நாம் பெறப்போகும் முக்கிய தகவல்களில் ஒன்று முருக வணக்கமாகும்.

இந்திய இந்துப் பாரம்ப ரியத்தில் முருகன் தமிழ்ப் பண்பாட்டுக்குச் சிறப்பான இந்துத் தெய்வம் என்பர். இன்றைய நிலையில் காணப்படும் முருக வழிபாடானது தமிழ் நாட்டின் முருக பாரம்பரியத்தையும் வட இந்திய ஸ்கந்த மரபினையும் இணைப்பதாக உள்ளது. இந்தப் பண்பாட்டிணைவு திருமுருகாற் றுப்படையிலேயே நிறைவேறி விட்டது. திருமுருகாற்றுப் படை ஏறத்தாழ கி.பி. 250–600க்கும் இடைப்பட்ட கால நூலாகும்.

தமிழ் நாட்டு இந்து மர பினுள் முருகனுக்கான ஆறு படை வீடு எனும் ஒரு மரபு உண்டு.

திருப்பரம்குன்றம், திருத் தணிகை, சுவாமிமலை, பழனி, பழமுதிர்ச் சோலை (அழகர்மலை) என்னும் ஐந்து மலைகளையும் ஆறாவதாக குன்று தோறாடல் என்று எல்லா மலைகளையும் இணைத்துக் குறிப்பிடுவர். குன்று தோறாட லுக்குள்ளே கதிர்காமத்தையும் கொண்டு வரும் மரபு உண்டு இவற்றைவிட கடற்கரையோரங்க ளிலேயும் முருகன் கோயில்கள் உள.

**உதாரணம்:– திருச்செந்தூர்.**

ஈழத்திற் பல இடங்களிலும் முருகன் வழிபாடு நடைபெற்று வருகின்றதெனினும் ஈழத்தின் மிக முக்கியமான முருக தலங்களாகப் பின்வருவனவற்றைக் கொள்ளும் மரபு உண்டு.

***கதிர்காமம்***
***மாவிட்டபுரம்***
***நல்லூர்***
***செல்வச்சந்நிதி***

இந்தப் பட்டியலுள் செருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயிலும் இடம்பெறல் வேண்டும்.

ஈழத்திற் காணப்படும் முருக தலங்களை நோக்கும் பொழுது அவற்றினுள்ளே செல்வச்சந்நிதி முக்கியமான ஒரு இடத்தைப் பெறுவதை அவதானிக்கலாம்.

செல்வச்சந்நிதி என்பது யாழ்ப்பாணம் தொண்டமானாற்றில் பெருங் கடலுக்கருகேயுள்ள கல்லோடைக் கரையிலுள்ள முருக தலமாகும். இக்கோயிலின் ஐதீகங்கள் வழி பாட்டு மரபுகள் மற்றைய கோயில்களிலிருந்து வேறுபட்டவையாகும்.

முதலாவதாக நோக்கப்பட வேண்டுவது கோயிலின் பெயராகும்.

சந்நிதி என்னும் சமஸ்கிருதச் சொல் சம் – நி – தி என நிற்பது இதன் கருத்து.

**1. அண்மையில் இருப்பது,**
**அண்மை நிலை,**
**2. முன்னே நிற்றல்,**

என்பனவாகும் காலக்கிரமத்தில் தெய்வம், குரு, பெரியார் முன் நிற்பதை சந்நிதி சந்தானம் என்பன குறித்தன. எனவே சந்நிதி என்பது முருகன் முன் நிற்றலைக் குறிக்கின்றது. கோயில்களிற் சந்நிதிகள் உண்டு. இங்கு சந்நிதியே கோயில்களாகவுள்ளது.

செல்வச் சந்நிதி ஓர் அசாதாரண பெயர். செல்வச் சந்நிதி ஓர் அசாதாரண கோயில். இக் கோயிலின் மிகப் பிரதானமான அம்சம் இங்குள்ள பூசை வழிபாட்டு நடைமுறை களாகும்.

இங்கு பிராமணர் பூசை செய்வதில்லை. தொண்டைமானாற்றில் பாரம்பரியமாக வசித்து வந்த ஒரு குடும்பத்தின் ஆண் சந்ததியினரே கோயிற் பூசைக்கு உரித்தானவர். இக் கோயிற் பூசகர் தன்னைப் பக்தனுக்கும் முருகனுக்கும் இடையேயான பாலமாகக் கருதாமல் தன்னை வழிபடுவோருள் ஒருவராகவே கருதிப் பூசை செய்வர். இங்கு பூசையில் மந்திரங்கள் உச்சரிக்கப் படுவதில்லையாதலால் வாய் கட்டிப் பூசை செய்யும் மரபுண்டு.

இக் கோயில் பற்றிய ஐதீகங்களை இரண்டு பிரதான பகுதிகளுக்குள் வகுக்கலாம்.

1. முருகன் இங்கு கோயில் கொண்டமை பற்றியவை.
   கோயிலின் தோற்றம்
   குறிப்பிட்ட குடும்பத்தினர் பூசகர்களாகத் தெரிவு செய்யப் பட்டமை.
   பூசையின் பொழுது கடைப் பிடிக்கவேண்டிய நடை முறைகள் ஆதியன.
2. இக் கோயிலுக்கும் கதிர்காமத்துக்கும் கற்பிக்கப்படும் உறவு.

இரண்டாவது ஐதீகம் மிகமுக்கியமான ஒன்றாகும். முருகன் செல்வச்சந்நிதியிலேயே எப்பொழு தும் இருப்பதாகவும் கதிர்காமத் திருவிழாவின் பொழுது ஒரு நாள் முன்னர் கதிர்காமம் சென்று அங்கு தீர்த்தம் நடந்து முடிந்ததும் திரும்பி வருவதாக ஐதீகம். இந்த ஐதீகத்தை நிகழ்த்திக்காட்டும் சடங்குகள் இக்கோயிலில் மிகப் பிரதான இடத்தைப்பெறும்.

இங்குள்ள பூசைமுறை இப்பொழுது சில சமஸ்கிருதமயப் பாட்டு அம்சங்களைக் கொண்டிருக்கிறது என்பது உண்மையெனினும் (உருத்திராபிஸேகம்), உண்மையில் அது சில தனித்துவமான அம்சங்களைக் கொண்டது.

வேலுக்குக் காட்டும் கர்ப்பூர தீபங்களை மக்களை நோக்கிக் காட்டுவது, கோயிற்பூசைக்கு பலாவிலையில் அமுது படைத்தல்( இந்த அமுதே பிரதான பிரசாதமாகும்) பூசை முடிந்ததும் ஐயர், மணி, தீபத்தை வைத்துத் தான் வணங்கல், ஐயரின் காலைத் தொட்டுக் கும்பிடுவோருக்கு ஐயர் தானே விபூதி சார்த்தல் என்பன அன்றாட பூசைகளிற் காணப்படும் அம்சங்களாகும்.

இவற்றைவிடத் திருவிழாக் காலங்களிலும் மற்றைய கோயில்களைவிட வித்தியாசமான மரபுகள் உள்ளன. திருவிழாவின் பொழுது ஏழு, ஒன்பது பருவமடையாப் பெண் குழந்தைகள் தீபங்கள் கொண்டு செல்லல் ஒரு விசேட அம்சமாகும். திருவிழாப்பூசைகளுக்கு பூ எடுத்துக் கொடுப்போர் திருவிழாக் காலம் முழுவதும் கோயிலிலேயே தங்குவர். திருவிழாச் செய்யும் குருக்களும் பதினைந்து நாட்களும் கோயிலிலேயே தங்குவர். இங்கு வள்ளியம்மன் வணக்கமுண்டு. வள்ளியம்மன் வாசலில் மாவிளக்கு எரிப்பர்.

இங்குள்ள பிள்ளையாரை மாணிக் கப்பிள்ளையார் என்பர்.

திருவிழாக்காலங்களில் சுவாமிக்குச் செய்யப்படும் சாத்துப்படி வித்தியாசமானதும் மிக அலங்காரமானதுமாகும்.

இங்கு வேலே வணங்கப்படுகிறது. இக் கோயிலின் இன்னொரு முக்கிய அம்சம் இங்கு வழங்கப்பெறும் அன்னதானமாகும். இங்குள்ள பல்வேறு மடங்களில் இந்த அன்னதானங்கள் வழங்கப் பெறும். சந்நிதிக்கு செய்யப்படும் பிரதான நேர்த்திகளுள் ஒன்று அன்னதானமாகும். சந்நிதி முருகனை அன்னதானக் கந்தன் என்று குறிப்பிடும் முறையுண்டு.

மேற்கூறிய இந்த இரண்டு பண்புகளையும் நோக்கும்பொழுது, இக்கோயிலில் வெளிப்படும் மத

அனுபவம் மிக முக்கியமான ஒன்றாகும். இங்கு வழிபடுவோர்கள் தங்கள் மன உணர்ச்சிகளை ஒளிவு மறைவின்றி வெளியிட்டு இறைவனிடம் முறையிடும் முறை நெஞ்சை அள்ளும் காட்சியாகும். சமஸ்கிருதமயப்பாடு அற்ற முறையிலேயே இவர்களின் வழிபாட்டுணர்வுகள் வெளிக் காட்டப்படுகின்றன.

சந்நிதிச் சூழலில் யோகிகள் பலர் வாழ்ந்து வந்துள்ளனர்.

சந்நிதியில் தங்கித் தீராத நோய்களைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையுமுண்டு. அங்கு வழங்கப்படும் அமுதை மருந்து என்றே சந்நிதி பக்தர்கள் குறிப்பிடுவர். மொத்தமாக நோக்கும் பொழுது முருக தலங்களுள் செல்வச் சந்நிதி முக்கியமான பல தனித்துவங்களைக் கொண்டது என்பதில் ஐயமில்லை.



## வாசகர்களே!

உங்கள் திறமைகளை இங்கே காட்டுங்கள். சமய சம்பந்தமான கட்டுரைகளை உங்களிடமிருந்து எதிர்பார்க்கும் அதேவேளையில் பிரசுரமாகும் கட்டுரைகளில் சிறந்தது என ஆசிரியர் குழு தேர்ந்தெடுக்கும் கட்டுரைக்கு சன்மானம் வழங்கவும் உள்ளோம். உடனே உங்கள் சமய அறிவை எழுத்தில் வடியுங்கள்.

– ஆசிரியர் –


# SRI KRISHNA SOUTH INDIAN RESTAURANT

192/194 Tooting High Street, London SW 17.

Tel: 0181 672 4250/6903

&

# RAGAM SOUTH INDIAN RESTAURANT

**57 CLEVELAND STREET,**
**LONDON W1 Tel: 0171 636 9098**

&

# MALABAR JUNCTION

107 Great Russell Street, London WC1

Tel: 0171 580 5230

( An exclusive South Indian Restaurent)


**SPECIALISTS IN KERALA CUISINE**



# இந்து சமயம்

## க. குணரத்தினம்

### மகாத்மா காந்தி



காந்தியடிகள் இந்தியாவில் வர்தா ஆசிரமம், சபர்மதி ஆசிரமம் என்பவற்றை ஆரம்பித்தார். இவற்றை ஆரம்பித்ததின் நோக்கம் தர்மத்தை அநுசரித்து ஒழுக்கத்தைப் பரவச் செய்வதே. ஆசிரமத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தவரும் பொதுக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்து தமது தனிப்பட்ட வேலைகளைச் செய்தனர். நூல் நூற்றல், பிரார்த்தனை என்ற பொதுச் செயற்பாடுகளில் எல்லோரும் ஒன்று கூடினர். ஆசிரம வாசிகள் பல சமூக சமய பின்னணியைச் சேர்ந்தவர்கள். குடும்பமாகவும் இருந்தார்கள்.

ஆசிரம வாழ்வில் சமூக வாழ்வின் முக்கியத்துவம், கல்வி மூலம் நற்குணங்களைத் தோற்றுவித்தல், அன்றாட வாழ்விற்கு வேண்டிய திறன்களை விருத்தி செய்தல், சமூகத்துக்கு எவரும் பாரமில்லாதிருத்தல், தீமைகள் வராது பார்த்தல் என்பன கவனத்தில் எடுக்கப்பட்டன. எல்லோரும் பின்பற்றவேண்டியன, உடல் உழைப்பு, ஊக்கத்துடன் தொழிற்படுதல், உரியவாழ்வு, தற்கட்டுப்பாடு, நேரம் தவறாமை, மனதை ஒரு முனைப்படுத்தல், பாடல்களை மனப் பாடம் செய்தல், சரியாக உச்சரித்தல் என்பன. ஆசிரம வாசிகள் எடுத்த சத்தியங்கள் பின்வருமாறு:

> **சமயத்துக்கும் அரசியலுக்கும் எத் தொடர்புமில்லை என்று கூறுவோருக்கு சிறிதளவு தயக்கமுமில்லாமல் மிகவும் பணிவாக நான் கூறக் கூடியது என்னவெனில் அவர்களுக்கு சமயம் என்ன என்று தெரியாது என்பதே.**

**சத்தியத்திற்கு விசுவாசம்,**
**வன்மையின்மை,**
**பாலியல் கட்டுப்பாடு,**
**உடமையின்மை,**
**களவாடாமை,**
**சுவையைக் கட்டுப்படுத்தல்,**
**பயமின்மை,**
**தீண்டாமை ஒழித்தல்,**
**தனது உணவுக்கு உழைத்தல்,**
**சமயங்களிடையே சமத்துவம்**
**உள்ளூர் பொருள்கள் உபயோகம்.**

சத்தியம், அகிம்சை என்பவற்றில் விசுவாசம் உள்ளவர்தான் சத்தியாக்கிரகியாக முடியும். சத்தியாக்கிரகியிடம் பணிவும், மனிதனிடத்தே அன்பு செலுத்தலும், எத்தகைய தியாகத்துக்கும்– (உயிர்த்தியாகம் உட்பட) தயாராக இருத்தலும் அவசியம் எனக் கருதப்பட்டது. கொடுமையைக் கொடுமையால் தடுக்காது நன்மையால் தடுக்க வேண்டும். பகைவனை வெறுக்காமல் அவனை அன்பினால் வெல்ல முயலவேண்டும். தீமையை அன்பின் பலத்தோடும் சத்தியத்தின் பலத்தோடும் எதிர்க்கவேண்டும் இந்த இலட்சியத்துக்காக எவ்வித துன்பத்தையும், ஏன் சாவைக்கூட ஏற்கத் தயாராக இருக்க வேண்டும். இதனால் ஆன்ம சக்தி பலப்படும்.

சத்தியாக்கிரகத்தின் இரு அம்சங்களாவன, ஒன்று, அகிம்சை முறையில் ஒத்துழையாமை, மற்றது, சட்டத்திற்கு கீழ்ப்படியாமை. வன்மையற்ற போராட்டத்தின் மூலம் இந்தியா சுதந்திரம் பெற்றது. காந்தியடிகள் இதன் மூலம் போருக்கு மாற்றுவழி ஒன்று உண்டென உலகிற்கு செய்கையிற் காட்டினார்.

அமெரிக்காவில் இன ஒதுக்கல் கொள்கையினால் கறுப்பின மக்கள் மிகவும் பாதிப்புற்ற போது மார்ட்டின் லூதர் கிங் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்க உறுதி பூண்டார்.

காந்தியடிகளின் பல நூல்களையும் வாசித்து அவரின் போராட்ட முறைகளையும் ஆராய்ந்ததன் பயனாக, கிங் சத்தி யாக்கிரகத்தை தமது போராட் டத்திற்கு ஆயுதமாகக் கைக் கொண்டார். அதன் பயனாக சரித்திரப் பிரசித்தியான குடி உரிமைச் சட்டமூலம் 1964 ஆம் ஆண்டு ஏற்கப்பட்டது. அதே ஆண்டு கிங் நோபல் பரிசினைப் பெற்றார்.

காந்தியடிகள் கடவுள், சமயம், மோட்சம், சமுதாயப்பிணிகள் என்பன பற்றி தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். கடவுள் பற்றிக் கூறுமிடத்து, ***கடவுள் எனக்கு பூவுலகத் தந்தை போன்றவர் முடிவற்றவர். எனது வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்விலும் என்னை ஆளுகிறார். அவர் விருப்பின்றி ஒரு இலையும் அசையாது என்பதை நான் நம்புகின்றேன். நான் விடும் ஒவ்வொரு மூச்சும் அவர் அநுமதியில் தங்கியுள்ளது. அவரே சத்தியம், அன்பு, சட்டம், இன்னும் மனிதனின் புத்திக் கூர்மைக்கு எட்டிய கோடி விடயங்கள் உட்பட எல்லாம்.*** காந்தியடிகள் நடாத்திய பல போராட்டங்களின் போதும் பல சோதனையான கட்டங்களிலும் உண்ணாவிரதத்தின் போதும் கடவுள் தம்மை வழிநடத்தினார் என்று கூறுகின்றார். தான் கிரமமாகப் பிரார்த்தனை செய்து வந்தபோது தமது அகத்தே ஒரு குரல் ஒலிப்பதை தாம் அடையாளம் கண்டதாகவும், அந்தக் குரல்தான் தமக்கு தீர்மானங்கள் எடுக்க உதவியதாகவும், அதுவே கடவுளின் குரல் என்றும் கூறுகின்றார்.

சமயம் பற்றிக் கூறும்போது ***சமயம் என்பது ஒருவனது இயற்கைக் குணத்தை மாற்றி, சத்தியத்துடன் முற்றாக இணைப்பதன் மூலம் தூய்மைப்படுத்தி, ஆன்மா இறைவனை அறியவும்; தொடர்பு கொள்ளவும் வழி சமைத்தல்*** என்கின்றார். எல்லாச் சமயங்களுக்கும் அடிப்படையானவை சத்தியமும்; அன்பும். எல்லாச் சமயங்களும் ஒரு மரத்தின் பல கிளைகள் போன்றவை. இந்துசமயம், வன்மையின்மை என்னும் பொருளைக் கொண்டுள்ளதனால், ஒப்பற்றது. எல்லாச் சமயங்களும் தமது வித்தியாசமான வழிகளில் கடவுளை அடையும் ஒளிமயமான பாதையைக் காண்பிக்கின்றன. எல்லாச் சமயங்களும் உண்மையானவை. அவற்றில் குறைபாடுகள் உண்டு. எனது இந்துசமயம் போன்று மற்றைய சமயங்களும் எனக்குப் பரிசயமானவை என்று கூறுகின்றார். மேலும் காந்தியடிகள், பல்வேறு சமயங்களையுடைய சமூகத்தில், சமாதானம், ஒற்றுமை என்பவற்றைப் பேண, சகிப்புத்தன்மை எனும் திறவுகோல் அவசியம் என்றும், எந்த ஒரு சமயத்துக்கும் உயர்வான அந்தஸ்து வழங்கலாகாது என்றும் கூறுகிறார்.

சமயத்திற்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பை காந்தியடிகள் பின்வருமாறு விளக்குகின்றார். **சர்வவியாபகமுள்ள சத்தியத்தை நேருக்கு நேர் சந்திக்க வேண்டுமானால் ஒருவர் இழிவான படைப்புக்களையும் தன்னைப்போல் நேசித்து அன்பு செலுத்தல் வேண்டும். அந்த முயற்சியில் ஈடுபடுபவர் வாழ்க்கையின் எத்துறையிலுமிருந்து விலகி இருக்க இயலாது. எனவே தான் சத்தியத்தின்மேல் எனக்கு உள்ள விசுவாசம் அரசியல் துறையில் என்னை இழுத்தது. சமயத்துக்கும் அரசியலுக்கும் எத்தொடர்புமில்லை என்று கூறுவோருக்கு சிறிதளவு தயக்கமுமில்லாமல் மிகவும் பணிவாக நான் கூறக் கூடியது என்னவெனில் அவர்களுக்கு சமயம் என்ன என்று தெரியாது என்பதே.**

சமய நூல்கள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், சில சமய நூல்கள் கடவுளால் உணர்த்தப்பட்டவை என்பதனை ஏற்றபோதும், பல நூல்கள் மனித தீர்க்க தரிசிகள் மூலமும், விளக்க உரையாளராலும் கையாளப்பட்டமையால் அவற்றை ஆராய்ந்து பாராமல் ஏற்றுக் கொள்ளமுடியாது என்கின்றார். ஒரு சமய நூலை மதிப்பீடு செய்யும் போது பின்வருவனவற்றைக் கவனத்தில் எடுக்கவேண்டும் என்கின்றார்.

*1. விவரிக்கப்பட்ட சொற்களல்ல, உட்கருத்தே முக்கியமானது.*

*2. சத்தியம், அகிம்சை, என்பவற்றிற்கு முரணான கருத்துக்களை உடையனவா எனத் தெரிந்து, முரணானவற்றை ஒதுக்கி, ஒத்துப் போவதை ஏற்றல்.*

*3. நியாயம், நீதி என்பவற்றிற்கு முரணான நூல்களை அல்லது மரபை ஒதுக்கிவிடுதல்.*

மோட்சத்தைப்பற்றி காந்தியடிகள் கூறியது. ***முப்பது வருடங்களாக எனது வாழ்வு, இயக்கம் எல்லாம் ஒரு குறிக்கோளை அடையும் நோக்கத்திற்காகவே செலவாயின. கடின முயற்சிகள் மூலமும் பல ஏக்கங்களின் மத்தியிலும் நான் அடைய விரும்பியது, என்னை உணர்தல், கடவுளை நேருக்கு நேர் காணுதல், மோட்ச நிலையை அடைதல் என்பன. ஒருவர் உயிருடன் இருக்கும்வரை அவரை முத்தி அடைந்தவர் என்று கூறமுடியாது. முத்தியடையத் தகுதி பெற்றுள்ளார் என்றே கூறலாம்.***

உடலோடு தொடர்பு இருக்கும்வரை விடுதலை அடைய வேண்டிய அவசியம் உள்ளது. உடற் சிறையின் கதவு திறக்கும்வரை மோட்சத்தின் நறுமணம் எமது அனுபவத்திற்கு அப்பாற்பட்டது. ஒருவரின் சொந்த நாட்டின் நலம் உலகத்தின் நலனுக்கு முரண்பாடில்லாதவரை, ஒருவர் நாட்டின் நலனுக்காக ஆற்றும் சேவை அவரை மோட்சத்துக்கு கொண்டு சேர்க்கும். மனித வாழ்வு பற்றியும் மனித சமுதாயம் பற்றியும் அதன் குறைபாடுகள் பற்றியும் காந்தியடிகள் கருத்துக்களை வெளி மிட்டுள்ளார். நோயுற்ற சமுதாயத்தின் நிலையை விளக்கும்போது தற்கால வியாதி, இடைவெளி வியாதி. அரசாங்கத்துக்கும் ஆளப்படுப வர்களுக்கும் இடையே உள்ள இடைவெளி. பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே உள்ள இடைவெளி. மலைக்கும் மடுவுக்கும் உள்ள இடைவெளி. உயர்ந்த சாதி என்பவருக்கும் தாழ்ந்த சாதி என்பவருக்கும் இடையேயுள்ள இடைவெளி. இது போல நாடுக ளுக்கு இடையேயும் இடைவெளி உண்டு என்கின்றார். நோயிலி ருந்து விடுதலைபெற உபாயம் கூறுகின்றார். மக்களை நெருக்கமாக இழுக்கும் சக்தி அன்புக்கு உண்டு. வாழ்வில் அன்பு, சத்தியம், வன்மையின்மை என்பன வழிகாட்டும் தத்துவங்களாக இருக்கவேண்டும். இவை தனி மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் அர்த்தமுள்ளவை. தனிமனிதன் பயம், பேராசை, பெரு வாழ்வு, இடாம்பீகம் என்பவற்றைத் தவிர்த்து, தனது தேவைகளைக் குறைந்த பட் ச வாழ்க்கை நிலையில் தனது கடமைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவில் கட்டுப்படுத்த வேண்டும். அத்துடன் தன்னை உணர்தல் எனும் இலட்சியத்தை அடைய முயல வேண்டும் என்கின்றார். மனிதனை மனிதனும், ஒரு தொகுதியினரை இன்னொரு தொகுதியினரும் சுரண்டுவதால் தோன்றும் மனிதாயத்தின் பிரச்சினை களை சத்தியாக்கிரகத்தின் மூலம் தீர்க்கலாம் என்று காந்தியடிகள் நம்பினார். ஒவ்வொரு மனிதனும் தனது தேவைகளைப் பெருக்காமல் கிடைத்ததைக்கொண்டு திருப்திப் பட்டால் உலகில் உள்ளது எல்லோ ருக்கும் போதும் என்று காந்திய டிகள் தமது போதனைகளாலும் சொந்த வாழ்க்கை முறையாலும் காட்டினார்.


# VASAN & COMPANY
## *Auditors & Accountants*

**Specialists in**

* Accounts Preparation
* Book Keeping Services
* VAT, PAYE, Self Assessment
* Tax Planning * Tax Investigation

**78 BECKENHAM ROAD, BECKENHAM,**
**KENT BR3 4RH**
**TEL: 0181 658 8867 FAX: 0181 658 8177**

# சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

**- மு. நற்குணதயாளன் -**



மாணிக்கவாசகரின் திருவெம்பாவையின் கருத்துக்களை சமூகக் கண்ணோட்டத்துடன் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இந்த வரிசையில் இம்முறை பின்வரும் பாடல்களைப் பார்ப்போம்.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் நீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள்உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்

மொய் - ஆர் என்பது வண்டுக் கூட்டம் நிறைந்த எனப் பொருள்படும். தடம் என்பது அகன்ற எனவும் பொய்கை என்பது திருக்குளம் எனவும் பொருள்படும். இனி கருத்தைப் பார்ப்போம்.

வண்டுக்கூட்டம் நிறைந்த அகலமான திருக்குளத்துள் புகுந்து நாங்கள் கைகளை அசைத்து முகேர் எனும் ஒலி எழும்படி உனது புகழைப்பாடி இறைவா உனது வழிவழி அடிமைகளாக வாழ்ந்து வருகின்றோம். நெருப்புப் போன்ற செம்மைநிறம் உடையவனே! வெள்ளிய திருநீற்றை முழுதும் அணிந்தவனே! பேரின்பப் பெருந்திருவுடையவனே! சின்னஞ் சிறு இடையையும் பெரியவிழிகளையும் கொண்ட உமையம்மையின் மணவாளனே! ஆண்டவனாகிய நீ உயிர்களை அடிமை கொண்டருளும் திருவிளையாட்டினால் பிழைத்து விட்டோம். இனி நாம் இளைத்துவிடாதபடி எம்மை காத்தருள்வாயாக.

அடுத்தபாடலில்,

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்துஆடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ் வானும் குவலயமும் எல்லாமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல் மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துட் டையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீர் ஆடேலோர் எம்பாவாய்

ஆர்த்து என்றால் மகிழ்ந்து என்றாகும். தீர்த்தன் என்பது பரிசுத்தன் எனலாம். இப்பாடல் மிக அருமையான பாடல் ஆகும். முதல் இரண்டு வரிகளிலும் நம்மைப் பிணித்துள்ள பிறவித்துன்பம் ஒழியவேண்டும் என்று எண்ணி, தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடுகிற பரிசுத்தனாகிய கங்காதரனைக் குறித்து நாம் ஆடுகிறோம் என்று கூறுகிறார். தொடர்ந்து இந்த வானம் நிலவுலகம் முதலிய யாவற்றையும் காத்து, படைத்து, அழித்து(கரந்து) திருவிளையாடல் புரியும் இறைவனைப் புகழ்ந்து பாடி வளையல்கள் குலுங்க நுண்ணிய வேலைப்பாடமைந்த அணிகலன்கள் அசைந்து ஓசை எழுப்ப, அழகிய கூந்தலில் உள்ள மலர்கள் மேல் வண்டுகள் மொய்க்க, மலர்கள் நிறைந்துள்ள பொய்கையில் நீந்திக் குடைந்து நீராடி ஈசனது பொன்னார் திருவடிகளைத் தொழுது ஆடேன் பாவாய் என்கின்றார்.

(இன்னும் வரும்)

வாசகர்களிடமிருந்து தரமான கட்டுரை கவிதைகளை எதிர்பார்க்கிறோம். சமயசம்பந்தமாகஎழுதி அனுப்புங்கள். தரமானவற்றை நிச்சயமாகப் பிரசுரிப்போம். அடுத்த கலசம் நவராத்திரியை முன்னிட்டு வெளிவரும். ஆதலால் உங்கள் ஆக்கங்களை அக்டோபர் மாதம் 2ஆம் திகதிக்குள் அனுப்பி வையுங்கள் - ஆசிரியர்

# ANTHONY'S CUTPRICE SUPERFOODS

## WHOLESALE & RETAIL

***For Srilankan, Indian, Malaysian, and Asian Groceries, Fresh Vegetables Weekly and Monthly Magazines***

உங்களுக்குத்தேவையான
இலங்கை இந்திய உணவுப் பொருட்களுக்கும்
வாராந்த மாதாந்த பத்திரிகைகட்கும்
சஞ்சிகைகட்கும்
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

**THE ONLY CHEAPEST AND BEST
IN
EAST HAM
FREE LOCAL DELIVERY SERVICE AVAILABLE**

**245 - 247 HIGH STREET NORTH
MANOR PARK
LONDON E12
TEL: 0181 471 4713**

# பிரம்மஞானமும் விஞ்ஞானமும்

-டாக்டர் அழகர் ராமானுஜம்-

*சென்ற இதழ்த் தொடர்ச்சி............*

இப்பொழுது பிரம்மஞானம் எல்லா மதங்களையும் ஒருங்கிணைக்கின்ற ஞானமாகவும், இது விஞ்ஞா னத்தை எப்படி அணுகுகின்றது என்பதையும் நாம் பார்க்கலாம். மதங்கள் அத்தனையும் ஒருங்கி ணைந்து விட்டதால் இதில் ஓர் உண்மை இருப்பது புலனாகி இந்த உண்மை விஞ்ஞா னத்திற்கும் ஓர் ஆதாரமாக அமைவதைக் காணலாம். விஞ்ஞானம் என்று நாம் சொல்லும்போது நமது நினைவிற்கு முதலில் வருபவர் நியூட்டன். மேலைநாட்டு விஞ்ஞானத்தின் தந்தை என்று நாம் நியூட்டனைச் சொல்லலாம். சுமார் 300 வருடங்களுக்கு முன்பு western science என்று சொல்லுகின்ற அந்த மேலை நாட்டு விஞ்ஞானத்திற்கு அடித்தளமாக அமைவது நியூட்டனின் சித்தாந்தம். தனது சித்தாந்தத்தை மூன்று பகுதிகளாக எழுதிய அந்த மாமேதை நியூட்டன் தனது சித்தாந்தத்தை ஆரம்பிக்கும்போது கூறுவார், நான் இந்தப் பிரபஞ்சத்தைப் பார்க்கும்போது அதில் நான்கு மூலங்கள் இருப்பதாக அறிகிறேன். அவையாவன வெளி, காலம், பொருள், சக்தி என்ற நான்காகும். இம் மூலங்களினாலேயே இப் பிரபஞ்சம் உருவாகி யிருக்கிறது என்பதாக நான் கருதுகின்றேன் என்று கூறுகிறார்.

இப்பொழுது பிரம்மஞானத்தின் பார்வையில் இதைப்பாருங்கள். இப் பிரபஞ்சத்தில் நான்கு மூலங்கள் இருப்பதாக நியூட்டன் கூறுவது சரியாகும் என நாம் பார்க்கும்போது நமது இந்து மதத்தில் வருகிற இந்தப் பிரம்மஞானம் கூறுவது வேறுபடுகின்றது. நாம் காண்கின்ற இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒரே ஒரு மூலம்தான் இருக்க முடியும். அதைத்தான் நாம் வேறு வகையாகச் சொல்லப்போனால் அதை அத்துவைத Philosophy என்றும் சொல்லலாம்.

ஒரே மூலம் என்பதை வலியுறுத்துவதற்காக அதை அத்துவைத தத்துவம் என்றும் சொல்லலாம். ஆக மூலம் ஒன்றுதான் என்று பிரம்மஞானம் கூறும்போது அதில் நம்பிக்கையுடைய எவரும் நியூட்டனின் முதல் வாக்கியத்தையே நம்ப மறுத்துவிடுகின்றோம். ஏனென்றால் இப் பிரபஞ்சத்தில் நான்கு மூலங்கள் இருப்பதாக நியூட்டன் கூறுவது அவ்வளவு சரியல்ல. ஆகவே அவருடைய சித்தாந்தங்கள் 200 ஆண்டுகளுக்குப் பிறகு சரிகின்றன. ஆனால் இங்கு அதிசயமான உண்மை என்னவென்றால் மாமேதை நியூட்டனுக்குக் கூட இந்தப் பிரபஞ்சத்துக் கெல்லாம் மூலகாரணமாக ஒரு மூலம் உண்டு என்கின்ற அந்த உண்மை புலப்படாமலேயே போய்விட்டதுதான். ஆகவே நான்கு மூலங்களாகப் பிரபஞ்சத்தை நியூட்டன் பார்த்தது அவ்வளவு சரியான பார்வை அல்ல என்பதுதான் இந்து மதத்தின் கணிப்பு. ஆகவேதான் அவரது சித்தாந்தம் பின்னால் 200 ஆண்டுகளுக்குப் பிறகு சரிகின்ற சூழ்நிலைக்கு உள்ளாகியது..

இதற்குப் பிறகு வருகிறார் ஐன்ஸ்டையின். ஐன்ஸ்டைன் வரும்போது அவர் ஆணித்தரமாக நியூட்டனை முதலில் நம்பியவர் பின்பு ஏன் நியூட்டனின் சித்தாந்தம் சரிந்தது என்ற ஒரு ஆராய்ச்சியையும் ஆரம்பிக்கிறார். Physics and Reality என்ற தலைப்பில் ஒரு ஆய்வுக்கட்டுரை எழுதினார் ஐன்ஸ்டைன். அதில் ஐன்டைன் கூறினார், இந்தப் பிரபஞ்சத்தில் மூலங்களாக நான்கினை நியூட்டன் வைத்தது அவர் செய்த Philospphical Error ஆகுமென. நான்கு மூலங்கள் இருக்கமுடியாது. இப் பிரபஞ்சத்திற்கு மூலம் ஒன்றுதான் இருக்கமுடியும். அந்த ஒன்றினை வைத்துத்தான் விஞ்ஞானம் எழவேண்டும். விஞ்ஞானம் அமையவேண்டும் என்று விரும்பினார் ஐன்ஸ்டையின்.

ஆனால் அவரது வாழ்க்கையில் அந்த ஒன்று எது என்பதை அவரால் கண்டறியமுடியவில்லை. என்றாலும் மூலங்கள் நான்கு என்று கூறிய அந்த நியூட்டனின் சித்தாந்தத்தை மாற்றி நான்கு

மூலங்களை இரண்டாகக் குறைத்தார் ஐன்ஸ்டையின். அப்படி இரண்டாகக் குறைத்ததனாற்றான் அவர் அகில உலகப் புகழ்பெற்றார் Matter and Energy என நியூட்டன் சொன்னதை பொருளும் சக்தியும் வெவ்வேறு அல்ல பொருள் சிதைந்தால் அது சக்தியாகவும் சக்தி திரண்டால் அது பொருளாகவும் மாறலாம். ஆகவே Matter and Energy கிடையாது என்று Matter and Energy என்று அந்த இரண்டையும் ஒரு முடிச்சில் கொண்டு வந்தார் ஐன்ஸ்டையின். அதே மாதிரியாகத்தான் Space and Time என்று இருந்ததை (Space - Time) காலமும் வெளியும் ஒன்றுக்கொன்று சார்புடையவை ஆதலால் அவை இரண்டையும் சேர்த்து ஒரு பொருளாகக் கருதினார் ஐன்ஸ்டையின். மூலங்கள் நான்காக இருக்கின்றன என்ற நியூட்டனின் சித்தாந்தத்தை மாற்றி ஐன்ஸ்டையின் தனது சித்தாந்தத்தில் இப் பிரபஞ்சத்தை இரண்டு இரண்டு மூலங்களாகக் காண்கின்றார் இருந்தாலும் அவரது பார்வை சரியில்லை என ஐன்ஸ்டைனுக்குத் தெரியும். ஏனென்றால் இந்து மதத் தத்துவத்தின்படி மூலங்கள் இரண்டாக இருக்கமுடியாது. மூலம் பிரபஞ்சத்துக்கு ஒன்றாகத்தான் இருக்கமுடியும். ஆகவே ஐன்ஸ்டையின் இதை அறிந்திருந்தபோதிலும் அந்த மூலம் எது என்று அவரால் காணமுடியவில்லை. அவரது முடிவை இந்த உலகமே போற்றுகின்றது. எனது முடிவை இந்த உலகமே போற்றுகின்றது ஆனால் இது தவறானது என்று தனக்குத் தெரியும் என அவர் கூறுவார். ஆனால் ஒருபகுதி சரியானதுதான் ஆனால் மறுபகுதி என்றைக்குமே அழிந்து போகக் கூடியது எனபார். அதைப் பின்னால் வருபவர்கள் மாற்றக்கூடும். மாற்றிவிடலாம் என்ற ஓர் உண்மையை ஐன்ஸ்டைன் அவர்கள் கூறினார்கள்.

1915 இல் ஐன்ஸ்டைன் எழுதிய கட்டுரையை 80 வருடங்கள் கழித்து நாம், மாற்றுகின்ற நிலைமைக்கு வருகின்றோம். அந்தப் பிரம்மஞானம் தான் எவ்வாறு என்றால் இந்து மதத் தத்துவத்தின்படி பிரம்ம ஞானம் ஒன்றுதான் மூலம். அதுதான் சுத்தவெளி. இந்தச் சுத்தவெளி என்று கூறுகிற அந்த ஆதிநிலைக்கு மகரிஷி அவர்கள் தருகிற ஒரு விஞ்ஞான பூர்வமான ஒரு குணத்தை அந்த சுத்தவெளிக்குத் தந்திருக்கிறார்கள். அந்த சுத்த வெளிக்கு என்று ஒரு தன் இறுக்கம் சூழ்ந்த அழுத்தம் உண்டு என்று கூறுகிறார் மகரிஷி அவர்கள். இந்த தன் இறுக்கம் சூழ்ந்த அழுத்தத்தை ஆங்கிலத்தில் Self Compressive pressure force என்று நாம் கூறுவோம். இந்தப் பிரபஞ்சத்தின் பரிணாமத்தை ஆரம்பிப்பதற்குக் காரணமாக இருந்ததே அந்த சூழ்ந்த அழுத்தந்தான். விஞ்ஞானம் அந்த சூழ்ந்த அழுத்தத்தை கணக்கில் எடுத்துக்கொண்டால்தான் நிறைவு பெறும். அது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாதவரை விஞ்ஞானத்தில் நிறைவு ஏற்பட வழியே கிடையாது என்று கூறுகிறார் மகரிஷி அவர்கள். இன்றைய விஞ்ஞானத்தில் பெருவாரியான மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றத்தைச் சொல்வதற்காகத்தான் நான் இந்த லண்டன் பயணத்தை மேற்கொண்டிருக்கின்றேன்.

இந்த சூழ்ந்த அழுத்தம் என்ற அந்த self compressive surrounding pressure force என்ற ஒரு வாக்கியத்தைக் கொண்டு இன்று ஐன்ஸ்டையின் அன்று எழுதிய சில கட்டுரைகள் மாற்றப்பட்டிருக்கின்றன. நாம் இப்பொழுது கூறுகிற விஞ்ஞானத்தின் அடிப் படை மூலம் ஒன்றுதான் என்ற அடிப்படையில் நாம் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். நியூட்டனின் தத்துவம் மூலங்கள் நான்கு என்ற வகையில் அமைந்தது, ஐன்ஸ்டையினின் சித்தாந்தம் அமைந்தது மூலங்கள் இரண்டு என்ற வகையில்.

இப்பொழுது நமது பிரம்மஞானப்படி மகரிஷி அவர்கள் பெயரை வைத்து வேதாத்திரி மாடல் at the universal என்று போட்டிருக்கின்றோம். அதன்படி இன்று விஞ்ஞானத்தின் மூலமாக அமைந்தது ஒன்றே ஒன்றுதான். அந்த மூலம்தான் சுத்தவெளி. அந்த சுத்த வெளியின்மீது அமைந்த விஞ்ஞானந்தான் இனி வரப்போகிற விஞ்ஞானமாக இருக்க முடியும் என்று நாம் இப்பொழுது விஞ்ஞான மகாநாட்டில் எடுத்துக் கூறியிருக்கிறோம். விஞ்ஞான பூர்வமாகப் பார்க்கும் போது நமது இந்தியத் தத்துவம் விஞ்ஞானத்திற்கும் கை கொடுக்கிறது. இன்று தத்துவத்தை நாம் விஞ்ஞான மயமாக்கிவிட்டோம்.

மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் இன்று இரண்டறக் கலந்துவிட்டன. ஒரு காலகட்டத்தில் நாம் பார்த்தோமானால் அன்று மதங்கள் மட்டுமே இருந்தது. விஞ்ஞானம் அவ்வளவாக இல்லை. ஆகவே விஞ்ஞானமில்லாத மதங்கள் இருந்ததால் அன்று அவைகளிடையே மூடப் பழக்க வழக்கங்கள் அதிகம் நிறைந்துவிட்டன. மதம் தனது வலுவை இழந்துவிட்டது. அதே சமயத்தில் இப்பொழுது பார்த்தீர்களானால் விஞ்ஞானம் மட்டுமே ஓங்கிக் கொண்டே போவதனால் விஞ்ஞானத்தில் ஆன்மீகம் இல்லையென்றாகி, விஞ்ஞானத்தால் வந்த வளர்ச்சியினை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்ற அறிவும் நமக்கு இல்லாமல் போய்விட்டது. ஏனென்றால் நம்மிடம் ஆன்மீகம் இல்லாமல் போய்விட்டதுதான். ஆகவே மெய்ஞ்ஞானமும் வேண்டும் விஞ்ஞானமும் வேண்டும். இந்த இரண்டும் கலந்த ஞானம்தான் இன்று எமக்கு பிரம்மஞானமாக வருகிறது. இந்த மாதிரியான ஒரு பிரம்மஞானந்தான் அன்று ஐன்ஸ்டைன் விரும்பினார். ஐன்ஸ்டைன் அன்று கூறுவார் Religion without science is blind and science without religion is lame. இன்று நமக்கு மெய்ஞ்ஞானமும் வேண்டும் விஞ்ஞானமும் வேண்டும். இந்த இரண் டும் கலந்த ஞானமாக பிரம்ம ஞானந்தான் வேண்டும்.

இவ்வாறு மகரிஷி அவர்களால் எமக்கு அளிக்கப்பட்டுள்ள இப் பிரம்மஞானத்தைப் படிக்கிற நாங்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதை மட் டும் ஓரிரு வாக்கியங்களில் கூறிவிடுகின்றேன். இங்கு வாழ்கின்ற இந்தியர்கள், (நான் இந்தியர்கள் என்று கூறும்போது இன்றைய இந்தியாவை மட்டும் கூறவில்லை) அன்று ரிஷிகள் வாழ்ந்த காலத்தில் இந்தியாவில் முனிவர்கள் வாழ்ந்த காலத்தில், இந்தியா என்பது இந்தியா, பாகிஸ்தான், நேப்பால், ஆப்கானிஸ்தான், சிலோன் போன்ற ஒட்டுமொத்தமான ஒரு அகண்ட இந்தியாவைத்தான் குறிப்பிடுகின்றேன். ஏனென்றால் ரிஷிகள் வாழந்தபோது இத்தனை பிரிவுகள் இருந்ததில்லை. இந்த அகண்ட இந்தியா விலிருந்துதான் எத்தனையோ பேர் இங்கு வந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒன்று மட்டும் சொல்லவேண்டும். நாம் ஒரு பட்டத்தை மேலே பறக்கவிடுவதாக வைத்துக் கொள்வோம். பட்டத்தினுடைய நூல் நம் கையில் இருக்கிறது. பட்டம் உயர உயர பறந்து கொண்டேயிருக்கின்றது. பட்டம் எத்தனை உயரத்தில் பறந்தாலும் அதனுடைய நூல் நம் கையில் இருக்கும்வரை நமக்கு நம்பிக்கை உண்டு. அதைப்போலவேதான் இந்தியாவிலிருந்து எவ்வளவு தூரத்தில் நீங்கள் வாழ்ந்தாலும் உங்கள் கையில் அந்த இந்தியக் கலாசாரம் என்ற நூல் கையில் இருக்கும்வரை நாம் உயர்ந்து கொண்டேதான் போவோம்.

(முற்றும்)

★★


# EDGWARE PHYSIOTHERAPY CLINIC



Specialised in
Sports injuries
Run by
an experienced
Charted
Physiotherapist

KANESH NATHAN
*Ph.d, M.C.S.P*
S.R.P
10 th Drive
Edgaware
Middlesex HA8 8PT

Tel : 0181 958 9820
Fax: 0181 958 1244

# PARAM & CO

## *SOLICITORS*

for all your legal requirements
* Civil litigation & Civil Liberties
* Conveyancing ( Residential & Commercial)
* Immigration and Nationality Matters
* International Transactions
* Commercial Litigation * Personal Injuries
* Entertainment Law * Crime

**LEGAL AID CASES UNDERTAKEN**

**S. PARAMALINGAM, LLM**
Assistant Solicitors:
Miss Hina Rajshakha *(LLB Hons)*
Mrs Anixa Maru *(L.L.B Hons)*
Mrs Nithy Sivasanthiran

TEL: 0181 200 3500 FAX: 0181 200 1360
"SEGARAM HOUSE"
221 EDGWARE ROAD
COLINDALE, LONDON NW9 6LP.

# JAFFNA HOUSE

**Fully Licensed**
**Sri Lankan and South Indian**
**Restaurant and Takeaway**
**Restaurent New Entrance via Coverton Road**

உங்களுக்குத் தேவையான சகல உணவுகளையும்
சுத்தமான முறையில் சுவையுடன் பரிமாறக்
காத்திருக்கிறார்கள்.

Opening Hours
Monday to Sunday
12 noon to midnight

90, Highstreet, Tooting Broadway
London SW17
Tel : 0181 672 7786 / 0181 767 6668

# *ANAND PAN CENTRE*

**The international Film Stars Favourite**

**The most satisfying taste BABA Flavoured chewing tobacco 120 (supreme) 160(supreme) 600(supreme)**




**Kapuri, Banarasi, Culcutti, Maghai, Mitha, Masala,Khara, Shada ,Nauratan, Kiwam**

**TURBO SPECIAL**
**OPEN TILL MIDNIGHT**



NO 1
TICKET SELLING OUTLET



**229, GREEN STREET, FORESTGATE**
**LONDON E7 8LL**
**TEL: 0181 471 6387, FAX: 0181 503 4279**
**176 UPPER TOOTING ROAD**
**LONDON SW17 7ER.**
**TEL: 0181 672 7576**

# ARAVINDANS

## SOLICITORS

**EFFICIENT PROMPT & FRIENDLY LEGAL SERVICES**

***CONVEYANCING**
***RESIDENTIAL-COMMERCIAL**
***IMMIGRATION *PROBATE**
***MATRIMONIAL**
**CRIME/POLICE STATION/CIVIL MATTERS,**
**Landlord & Tenant Matters**

**TEL: 0181 503 5034**
**416 BARKING ROAD,**
**EAST HAM LONDON E6**

# சிவநெறி காத்த பெண்கள்

## –பு ஷ்பா செல்வநாயகம்–

உலக சமயங்கள் எல்லாவற்றிலும் இல்லாத ஒரு தனிச்சிறப்பு நமது சமயத்துக்கு உண்டு. மக்கள் சமுதாயத்தில் செம்பாதியினர் எனப் படும் பெண்கள் நமது சமயத்தைக் காத்துப் பணி செய்த காரணத்தாற் போலும் அது வீறு குன்றாத மேன்மையுடன் விளங்குகின்றது. பெரிய புராணம் என்னும் மகோன்னத காப்பிய புராண நூல் அன்பும் சிவமும் தமிழும் ஒன்றே என்பது போல சிவநேசச் செல்வர்களை மட்டுமல்லாது புனிதவதியார் திலகவ தியார் போன்ற மாதரசிகளின் வரலாறு களையும் சித்திரித்துக் காட்டுகிறது. நாயன்மார்கள் சமயப்பற்று மிக்க வர்கள். உயிரை இழந்தும் சைவக் கொள்கைகளை நிலை நாட்டுபவர்கள். அவர்களைப் பின்பற்றியே அவர்தம் மனைவியரும் வாழ்ந்துவந்தனர். இதனால் இவர்களது இல்வாழ்க்கை சமய வாழ்க்கையாகவே பரிண மித்திருந்தது.

திங்க ளூரில் வாழ்ந்த பிராமணர் ஒருவர் திருநாவுக்கரசர் பேரில் கரைகாணாத பக்தி காரணமாகப் பிள்ளைகளுக்கும், வீட்டிலிருந்த பொருள்களுக்கும், தாம் அமைத்து நடத்திய தண்ணீர்ப்பந்தல், அறச்சாலைகள் ஆகியவற்றுக்கும் அப்பெரியாரை நேரிற் காணாமலேயே அவரது புகழைக் கேள்வியுற்று, திருநாவுக்கரசு என்ற பெயரைச் சூட்டி மகிழ்ந்தவர்.

இவர் ஒருமுறை அப்பெரியாரை நேரிற் காணும் பேறு பெற்றபோது மிக மனமகிழ்ந்து பாதபூசை, உபசாரம் ஆகியவை செய்து அவருக்கு உணவு படைக்க விரும்பி னார். வாழையிலை அரிந்து வரத் தோட்டத்துக்குச் சென்ற அவரது மூத்தமகன் அரவு தீண்டியதால் இலையை அறுத்துக் கொண்டு ஓடோடி வந்து வீழ்ந்து இறக்க, மைந்தன் மரணம் அடைந்ததைத் தெரிந்தால் அடியவர் தமது வீட்டில் உணவு உண்ணும் பேற்றைத் தாம் இழந்துவிடுவோம் என எண்ணிய பெற்றோர் இறந்த மைந்தனைப் பாயிற் சுற்றிக் கொல்லையில் வைத்துவிட்டு, அடியவருக்கு உணவு படைக்கத் தொடங்கினார்கள். அடியவர் உண் மையை உணர்ந்து இறைவன் பேரில் பதிகம் பாட இறந்த மைந்தன் எழுந்தான் என்பது வரலாறு. அந்தணர் விருப்பப்படியெல்லாம் அவரது மனைவி நடந்து கொண்டதாலேதான் அப்பூதி என்ற அந்த அந்தணர் அடிகள் ஆனார். எனவே அப்பூதி ***அடிகள்*** ஆனமைக்கும் வீடு சிவமணம் கமழும் வீடாகச் சிறந்தமைக்கும், நாயன்மாரில் ஒருவராக அவரைச் சைவ உலகம் போற்றும் நிலைமை ஏற்பட்டமைக்கும் அப்பூதி அடிகளின் மனைவியே முக்கிய காரணமாவார்.

இளையான்குடி என்ற ஊரில் வாழ்ந்து வந்த மாறர் என்பவரது மனைவி கணவனது கருத்தறிந்து நடப்பவர். வறுமை காரணமாக வளம் சுருங்கி இன்னல் பல நேர்ந்தும் தாம் பட்டினி கிடந்தேனும் அடியாரை உண்பித்து வந்தனர்.

ஓரிரவு கடுமழை பெய்து கொண்டிருந்தபோது தமது இல்லத்தி ற்குவந்த சிவனடியாரது சுரத்தைப் போக்கிய மாறர் அவரை உண்பிக்க அமுது சமைக்க அரிசி இல்லையே என்று வேதனைப்பட்ட போது அவரது மனைவி அன்று காலையில் வயலில் விதைத்த நெல்லைப் பொறுக்கி வந்தாற் சமையல் செய்யலாம் என்று தேற்றவே மழை பெய்து கொண்டிருக்கையில் இருளில் மிகவும் அரும்பாடுபட்டு தங்கள் வயலில் விதைத்த நெல் மணிகளைப் பொறுக்கிச் சேர்த்து வீடு கொணர்ந்தார். அம்மையார் வீட்டுக் கூரையிலிருந்த கழிகளை எடுத்து நெருப்பை உண்டாக்கி முளைவிட்டிருந்த நெல் மணிகளை வறுத்துக் குற்றி அரிசியாக்கி முற்றத்தில் முளைத்திருந்த கீரை யைப் பறித்து வந்து கறியாக்கினார். எங்ஙனமேனும் அடியாரை உண்பிக்க முடிந்ததே என எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தனர் மாறனாரும் அவர் மனைவியும் என்பது புராணம் கூறும் செய்தி. தம் கணவர் ஏற்ற விருந்தோம்பல் என்ற பண்பை நிலைநாட்ட உதவிய இம்மாதரசி சைவம் போற்ற வாழ்ந்தார் என்பதில் ஐயம் உண்டோ!!

வேளாண் குலத்திலே பிறந்த கலிக்காமர் சோழர் தானைத்தலைவர், இவருக்குத் திருமணம் நடக்கும் போது மணப்பெண் கூந்தல் ஒப்பனையோடு மணவறைக்கு வர சிவபெருமான் ஒரு சிவனடியாராக வந்து மணப்பெண்ணின் கூந்தலைக் கேட்க உடனே தந்தையார் மணப் பெண்ணின் கூந்தலை அரிந்து கொடுத்தார். சிவனடியாருக்குச் செய்யும் தொண்டு இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்ற நம்பிக் கையில் ஊறிவளர்ந்த பெண்ணாதலால் மணமகளும் தன் கூந்தலை அரிய இசைந்தாள். மணமகனும் எதிர்த்துப் பேசாது இருந்துவிட்டார். இத்தகைய சைவக் குடும்பத்தில் பிறந்து சைவக் குடும்பத்தில் புகுந்த பெண் சிவநெறி தவறாது கணவன் கருத்தறிந்து அறம்பல புரிந்து இல்வாழ்க்கை நடத்தி வந்தாள்.

அதே காலத்தில் வாழ்ந்த சுந்தரர் தன் மனைவியான பரவை யாரின் ஊடலைத் தீர்க்க இறை வனைத் தூதனுப்பியதை அறிந்து கலிக்காமர் மிக்ககோபம் கொண்டு சுந்தரரை வெறுத்தார். சிவபெருமான் ஏவலாற் சுந்தரர் கலிக்காமரோடு நட்புப் பூண அவர் ஊருக்கு வந்தபோது சூலைநோயாற் துடித்துக் கொண்டிருந்த கலிக்காமர் அதனை அறிந்து சுந்தரரைக் காண்பதைவிட இறப்பதே நல்லது என்று எண்ணித் தம் உடைவாளால் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வீழ்ந்தார். சுந்தரர் தம் கணவரால் வெறுக்கப்ப ட்டவராயினும் சிறந்த சிவனடியார் என்பதை அறிந்திருந்த கலிக்காமரது மனைவி அவரை வரவேற்க விரும்பினாள். கணவர் வீழ்ந்த காரணத்தால் வேறு ஆடவரையும் பெண்களையும் அனுப்பி வரவேற்கச் செய்தாள். ஆயினும் கணவரது விருப்பத்திற்கு மாறாக நேரில் சுந்தரரை வரவேற்கச் செல்லவில்லை. வீட்டினுள் வந்த சுந்தரரையும் பிறரைக் கொண்டே வரவேற்றாள். பின்னர் சுந்தரர் கலிக்காமரைத் தழுவ அவரும் உடல் நலம் பெற்று இருவரும் நண்பராயினர் என்பது பெரிய புராணம் கூறும் உண்மை. அவ்வம்மை அளித்த வரவேற்பே நாயன்மார் இருவரையும் நண்பர் ஆக்கியது. இத்தகைய அறிவு நலம் வாழ்வரசியர்க்கு இன்றியமையாததும் அவர்தம் சிவநெறி காத்து நிற்றற்கு இயைந்ததும் அல்லவா?

இன்னும் பரசமயத்தில் ஒன்றி நின்ற தம் அருமைச் சகோதரரை மீண்டும் சைவ நெறியில் சேர அரும்பாடுபட்ட திலகவதியார்.

**அம்பொன்மணி நூல்தாங்காது அனைத்து மிர்க்கும் அருள்தாங்கி**
**இம்பர்மனைத் தவம் புரிந்த திலகவதி யாரிருந்தார்.**

எனப் போற்றப்படுகின்றார். இவரும் மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம் வளவர் திருக்குலக்கொழுந்து, வளைக்கை மட மானி என்றும்
தென்னர்தலப் பழிதீர்த்த தெய்வப் பாவை என்றும் போற்றப்படும் மங்கையர்கரசியாரும் பெரிய புராணம் கூறும் சைவ மாண்பினைப் பேணிய மகளிர்தானே. கணவனால் தெய்வமாக மதிக்கப்பட்ட காரைக்கால் அம்மையாரும் நம்மால் ஏத்தி வணங்கத் தக்கவரே. தாம் பெற்று வளர்த்த மகனைக் கொல்வதும் கொன்ற மகனைக் கறிசமைப்பதும் எந்தத் தாயாலும் செய்யமுடியாத செயல்களாகும். கணவன் சொற்படி நடத்தலே மனைவியின் அறம் என்ற ஒரே கொள்கையைப் பின்பற்றிச் சிறுத் தொண்ட நாயனாரது மனைவியான திருவெண்காட்டு நங்கை இந்தச் செயற்கரிய செயலைச் செய்தார்.
வாளால் மகவரிந்து ஊட்ட வல்லேன்
என்று பட்டினத்தார் வியந்து பாராட்டியது இச் செயற்கரிய செயலேயாகும். எனவே பெரிய புராணம் எனும் கோவிலில் திகழும் ஒவ்வொரு மாதரசியும் தெய்வீகப் பண்புகளைப் பொருந்தி சைவ சமயத்தின் பெருமையை உலகறியச் செய்து மாட்சிமை பெற்றவர்களாவர்.




# Radha Sarees

Exclusive & Elegant Wedding sarees, Wedding Langhas Banaras Silk sarees Choli Suits, Japanese sarees, Salvar,Khamiz, Jewellery

திருமணத்திற்கான பட்டுப்புடவைகள்
பனாரஸ் புடவைகள், சல்வார் கமிசுகள் மற்றும் தங்க நகைகள் யாவும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

279 Green Street
Forest gate , London E7 8LJ

**Tel: 0181 472 8245**
**Fax 0181 472 2369**

KUMARANS


# குமரன்ஸ்
## தமிழ்க்கடை

உங்களுக்குஅன்றாடம்
தேவையான லீலா
தயாரிப்புகளை
மொத்த விற்பனை
விலைக்கு
தொகையாக வாங்கி
உங்கள் பணத்தைச்
சேமியுங்கள்

**142, HOE STREET**
**WALTHAMSTOW,**
**LONDON E17 4QR**
**TEL: 0181 521 4955**
**FAX: 0181 521 9482**

லீலா தயாரிப்புகளின்
அங்கீகாரம் பெற்ற
விநியோகஸ்தர்கள்

KUMARANS



# Satyan *Jewellers*

வாடிக்கையாளர்களுக்கு
தேரோடும் திருமுருகப்
பெருமானது அருள்
கிடைக்க நாமும்
வேண்டுகின்றோம்

**Specialists in 22ct. Gold Jewellery & Diamond**

தரமான நகை தேடி வாருங்கள்
நகையோடு நகை தருவோம் வாருங்கள்
கரமெல்லாம் காப்பதனை அணியுங்கள்
கண்ணாளன் மனங்குளிர வாழுங்கள்
விரலெல்லாம் மோதிரத்தைப் போட்டிடலாம்
வீச்சாக நீர் நடந்து வாருங்கள்
பாரதினில் சிறந்த நகை மாளிகை
சத்தியனின் இடம்வந்து சேருங்கள்

**220 GREEN STREET, FOREST GATE, LONDON E7 8LF**
**TEL: 0181 471 0564 TEL: 0181 470 7056**
**TEL: 0181 503 5379**

# CHILDREN'S KALASAM

**The following pages contain features and articles for and by children, hence are placed in the middle of the magazine. Children can remove these pages and save them and eventually bind them in the form of a booklet. It is our desire to increase the number of pages in children section from eight to twelve. This depends on the enthusiasm the children show. We welcome views and suggestions from children and parents.**

**-Editor-**

# THE BOLD BEGGAR

Once there lived two Rishis known as Saunaka and Abhipratari. They were the worshippers of Vayu or the wind-god. On a certain day at noon they were about to begin their lunch when there was a knock at the door. A young brahmachari who was hungry was at the door begging for alms.

" No boy, not at this hour" was the reply. the boy was not a stranger to such treatment. But he was a little surprised when he faced such disappointment at the ashram of a Rishi. So he decided to cross swords with the owner of the ashram and stuck on.

He addressed the owner once more. "Respected sir, may I know which god you worship?"

One of the Rishis said " You seem to be very impertinent. Well, my deity is Vayu, the wind god. He is also called Prana."

" Then you must know that the world takes shape in Prana and merges in it at the end. You must also know that Prana pervades all that is visible and invisible," said the brahmachari.

The Rishi said, " Why not? We do know it. You are telling us nothing new."

" For whom, sirs have you cooked this food? May I know?" was the next question.

"Of course, for the deity that we worship. For whom else can it be ?" came the ready reply.

" If Prana pervades the universe, he pervades me also who am but a part of the universe. It is he who pulsates in this hungry body that is standing before you begging for a few morsels!"

" Yes, what you speak is the truth."

" Then, dear Rishis, in denying food to me you deny food to the prana in me."Thus you are denying food to the deity for whom you have prepared it!" said the boy pointedly.

The Rishis felt ashamed, and then respectfully invited the bramachari for meals. Then they served him with food along with themselves. They realised that they were obsessed with the form while it was the sprit that really mattered.

# WHY DO WE WEAR THE HOLY ASH?

The holy ash is a medicine which can cure diseases. Eswara has three eyes. The holy ash is worn in the forehead to represent the third eye. All the nerves join at the forehead. By wearing the holy ash on the forehead, concentrating our thoughts on Eswara we obtain His grace. It is only ash but by wearing it with belief on Eswara it gives the effect which we expect from Him. It can be worn as a medicine for some ailment, or to gain peace of mind, for calming down the agitation in our mind or for praying for His blessings in the fulfilment of any venture we undertake.

The same holy ash given to various persons may have different tastes according to the mental state of the person at that time. Sweet when happy, sour when disturbed minded, bitter for ailing persons, hot when angry, salty when depressed and tasteless like mud for persons with no desires. When we are about to conclude some tasks, good smell is a sign of successful end; the smell of new eastern pot will give you fresh thought.

There are good and bad smells coming in the air. We have to draw only the good ones and shun the bad ones. Be always happy; do not get depressed or disgusted; then only your mind will be clear. Depression and tiredness are the prompters of anger.

# What is pooja or worship?


Many people do it for mental satisfaction only. It is enough if we make meditation which unites our soul with God. First learn what is meant by God.

During pooja or worship before you start meditating get the blessings of your mother, father and the spiritual Guru. Then get the blessings of all the Sages, Rishis and Siddas, that is of persons who have already tread the path and realised God. Then think of all the Gods that you like and lastly Eswara and concentrate on Him. When there is only one God in various forms, it will be enough if you think of Eswara alone. Do not strive to see the " Mayavi Rupa" ( false images) but fix your goal on seeing the Divine Light, the one reality. If you pray to Vinayaka or Muruga you will get the vision of Bogar (a Sidda). All Siddas will give their vision on proper concentration of your mind. You can see in your mental eye the one on whom you concentrate.

Children are taught daily worship in the family shrine room-rituals, disciplines, chants, yogas and religious study. They learn to be secure through devotion in home and temple, wearing traditional dress bringing forth love of the Divine and preparing the mind for serene meditation.

# சிறுவர் வரைந்த சித்திரங்கள்

## முருகன்



முருகன் என்றால் அழகன். முருகனுக்கு ஆறுமுகங்கள் உண்டு. இதனால் ஆறுமுகன் என்றும் அழைப்பார்கள். முருகன் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்ட படியால், கார்த்தி-கேயன் என சிறப்பாக அழைப்பார்கள். முருகன் வைத்திருக்கும் வேல், வீரத்தைக் குறிக்கும்,

— தர்சனா நவேந்திரன் வயது 7

திகதி 25/ 06/ 96


# SRI RAMAKRISHNAR

## CONTINUATION FROM LAST KALASAM

**ONE DAY RAMAKRISHNA WENT TO A DEVOTEE'S HOUSE WHERE HE SAW A PICTURE OF VIRGIN MARY WITH THE CHILD, JESUS SITTING ON HER LAP. HE WAS FILLED WITH LOVE FOR JESUS AND WANTED TO PRAY LIKE CHRISTIANS.**





**HE CAME BACK TO DAKSHINESWAR AND STARTED PRAYING TO LORD CHRIST IN THE CHRISTIAN WAY.**





**ON THE FOURTH DAY, AS HE WAS PRAYING HE SAW COMING TOWARDS HIM A PERSON WITH BEAUTIFUL LARGE EYES, FULL OF COMPASSION AND DIVINE LOVE. THE DIVINE PERSON EMBRACED HIM AND MERGED IN HIM.**

RAMAKRISHNA DESIRED TO SEE MOTHER IN THE FROM OF RAMA. SO HE CHANTED THE NAME OF SRI RAMA, DAY AND NIGHT. ONE DAY WHILE SITTING UNDER A TREE HE SAW SITADEVI. AT FIRST HE DID NOT UNDERSTAND WHO SHE WAS. SUDDENLY A MONKEY FELL AT HER FEET.





RAMAKRISHNA HAD MANY VISIONS OF SRI KRISHNA AND OTHER DEITIES. WHEN HE WENT TO KASHI HE HAD THE VISION OF LORD SHIVA.




# THE FOOLISH SCHOLARS

Once some four brahman boys were great friends. Three of them were scholars of scriptures while the fourth one was illiterate but intelligent.

All the four once thought, "Let's go out into the world and use our knowledge to be rich."

They moved out. After some time the greatest of the three scholars said in the absence of the fourth one, " We three are great scholars while the fourth one is illiterate. Why should we give him the share from our earnings?".

Another one said, "Let us drive him away from our company!"




But the third one said sympathetically, "You know we are all friends from our childhood, and it is not just and proper to abandon him at this stage".

At last they came to a conclusion, "O.K. let's be sympathetic to him."

At that time the fourth one was standing at a distance and was thinking, "How long shall we wander like this. We must find out some occupation!"

All the four moved on their journey, and came to a deep forest.



They suddenly saw a heap of bones there. The greatest of the scholars said, "Let's show our knowledge by bringing to life the creature whose bones are lying here!"

The fourth one believed that it was useless to exhibit their knowledge in this place but the others silenced him.

The greatest of them collected the bones and arranged them into a skeleton. The second one put skin, blood and flesh into the skeleton. The third one was about to put life into the body now, but the fourth one warned them, "Look here, this is the body of a lion and he will kill us all if you bring him to life."

# ESSENTIAL ETHICS OF THE TAMILS ULAGA NEETHI

# உலகநீதி

## Universal words of wisdom

Tamil Text: Verse No 13

ஆதரித்துப் பலவகையால் பொருள்கள் தேடி
அருந்தமிழால் அறுமுகனைப் பாடவேண்டி
ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன்
உண்மையாய் பாடிவைத்த உலகநீதி
காதலித்துக் கற்றோரும் கேட்டபேரும்
கருத்துடனே நாள்தோறும் களிப்பினோடு
போதமுற்று மிகவாழ்ந்து புகழும் தேடிப்
பூலோகம் உள்ளளவும் வாழ்வார்தாமே

## TRANSLITERATION

Aathatiththu-p-Pala Vathaiyaal Potulkal Theidi
Atunthamizhaal Arumukanai-p-Paada Vendi
Oathuviththa Vaasakaththaal Ulaganaathan
Unmaiyaay-p-Paadi Vaiththa Ulaga Neethi
Kaathaliththu Kattrotum Kerdda Peirum
Katuthudaney Naal Thoarum Kalippinoadu
Poatham uttru Miha Vaazlnthu Puhazlum Theidi
Poologam Ulla Alavam Vaazhvaar Thaamei

## TRANSLATION AND EXPLANATION

I am a devotee of Lord Murugan and my name is Ulaganathan. I have been privileged to be a benefactor and that has endowed me with wealth. I yearned to sing the praise of Lord Murugan and by his command and grace I have sincerely composed this piece of work called
" Ulaganeethi" ( The ethics for the world). Those who daily read this with understanding and those that listen to the reading will become happily enlightened, earn name and fame and live ever after death as long as this earth continues.

**-S. SRISKANDARAJAH-**



ஓம் என்பதே பிரணவ மந்திரம். ஓம் என்று கூறியே மந்திரங்களை ஓதவேண்டும். ஆதியில் ஓம் என்று கூறியே வேதங்களை ஓதத் தொடங்குவர். பின்னரே **ஹரி ஓம்** என்று அதை மாற்றினர்.

**அ - உ - ம்** என்ற மூன்று எழுத்துக்களே ஓம் ஆகும். வாயைத் திறப்பதன் மூலம் **அ** ஒலியும், உதட்டைக் குவித்தல் மூலம் **உ** ஒலியும், வாயை மூடுதல் மூலம் **ம்** ஒலியும் ஒலிக்கும். உலகிற் பேசும் மொழி எதுவாயினும் அதற்கு வாயின் இம்மூன்று அசைவுகளும் இன்றியமையாததாகும். **ஓம்** எந்த மொழியையும் சேர்ந்ததன்று. அது பொதுவாக இறைவனைக் குறிக்கும் ஒரு மந்திர ஒலி.

தமிழைப் பொறுத்தவரை **ஓ** வின் அமைப்பு பிள்ளையாரின் யானை முகத்திற்கு ஒத்திருப்பது குறிப்பிடத் தக்கது. நாம் எழுதத் தொடங்கும்போது போடும் பிள்ளையார் சுழி (உ) தான் **ஓம்.** மந்திரங்களை ஓதும்போது ஓம் ஒலியுடன் தொடங்குதல் மரபு.

ஓம்எனும் ஓங்காரத் துள்ளே ஒருமொழி
ஓம்எனும் ஓங்காரத் துள்ளே உருவரு
ஓம்எனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓம்எனும் ஓங்காரத் துள்ளே ஒண்முத்தி சித்தியே
-திருமந்திரம் (2676)

நங்க டம்பனை பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கர கோயிலான்
தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்துகி டப்பதே

# ஆன்மீகம் கலந்த அறிவியல் வாழ்க்கை.

தமிழ்மணி திருமதி பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கம்
திருகோணமலை

ஆன்மீகம் என்ற சொல் எல்லா மதங்களுக்கும் பொதுவாக இருப் பினும் சிறப்பாக அது இந்து மதத்தினராலேயே அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்து சமயத்தின் அடிப்படை நாதமே ஆன்மீகந்தான்.

வாழ்க்கை என்று கூறும்போது அது உடலும் உள்ளமும் சேர்ந்த தாகவே இருக்கவேண்டும். உட லுக்குப் பொருள்தேவை, உயிரு க்கு அருள் தேவை.

"இதனாலேயே அருளில் இலார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாததுபோல" என்றார் வள்ளுவர். இவ்வுலகில் நாம் வாழ்வதற்கு பொருள் ஒரு இன்றியமையாத அம்சமாகிவி ட்டது. அதிலும் இன்றைய கால கட்டத்தில் இந்த வாழ்க்கை எமக்குக் கிடைத்ததே பொருளீட் டத்தான் என்ற தப்பான எண்ணத்தில் மக்கள் அதற்காக தம் அன்றாட இல்லற தர்மங்க ளையே மறந்து கொண்டிருக்கி றார்கள்.

உண்மை! செல்வம் இல்வாழ் வுக்கு அவசியமான ஒரு பொரு ள்தான் ஆயின் அது தர்ம வழியில் ஈட்டப்படவேண்டும். அதே போல் அருள் இல்லாவிட்டால் எமக்கு அவ்வுலகத்தில் இடமி ருக்காது. உடல் தேவைகள் வசதியாக அமையாவிடின் உயிர் நலமும் உடல் நலமும் சிறப்பாக அமையமுடியாது. பொருள் ஏரா ளமாக இருந்தும் அதில் அருள் கலக்காது விட்டால் வாழ்க்கையின் குறிக்கோள் ஊனமாகிவிடுகிறது.

நம்மைச் சுற்றியுள்ள வான், நீர், வாயு, நிலம், பூமி அகியவற்றை நாம் உயிர் வாழ்வதற் கேற்றவாறு எமது அறிவியலை மையமாக வைத்து எமக்கு வேண்டியவாறு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள உதவுவதே அறிவியல் அல்லது விஞ்ஞானம் என்று கூறிக் கொள்ளப்படுகிறது.

ஆன்மீகத்தின் தரத்தை அறிந்து அதை மேலும் உயர்த்துவதற்கு முயற்சி செய்யும் வாழ்க்கைக்குப் பெயர்தான் ஆன்மீகம். அறிவியலும் ஆன்மீகமும் ஒன்றுக்கொன்று துணையாக இருக்கவேண்டி யவை. ஆன்மீகம் அற்ற அறிவி யலும் அறிவியல் அற்ற ஆன்மீ கமும் வாசமற்ற மலருக்கும் சுவையற்ற பாலுக்கும் ஒப்பானவை.

இன்று உலகத்தை, இல்லை உலகத்தில் ஒரு சிறு துளியாக இருக்கும் எமது நாட்டை எடுத்துக் கொள்வோம். மக்கள் அணு ஆயுதப் போருக்கு இடையில் சாவதா வாழ்வதா என்ற நிலையில் பயத்தின் விளிம்பில் வாழ்ந்து கொண்டி ருக்கிறார்கள். அருளியல் கலவாத அறிவியல் ஆர்வத்துக்குப் பதிலாக, அழி வையே தரவல்லது. அறிவியல் என்றும் ஆன்மீகம் என்றும் கூறும்போது சமூகநோக்கில் இவை பற்றிச் சிறிது சிந்திப்பது சாலவும் சிறந்ததென்று எண்ணு கின்றேன்.

சமூகம் என்று கூறும்போது மனி தர் பலர் கூடிவாழும் பிரிவுகளாகக் குறிக்கும் சமூக அமைப்பிற்கு அறிவியல் மிகவும் முக்கியமான அம்சமாகும். ஆரம்பத்தில் மனிதர்க ளுக்கு விலங்குகளாலும், திருடர்க ளாலும் அயலவர்களாலும் ஏற்படும் தீங்குகளை எதிர்த்துச் சமாளிக் கவே இப்படியான சமுதாய அமைப்புகள் தோன்றின. இவற்றின் வளர்ச்சிக்குப் பொருளாதாரம் மிகவும் பயனுடையதாக அமைந் தது. ஆனால் வேறுநோக்குகளில் பொருளாதார வளம் பெருகத் தொடங்கியபோது சமுதாய அமை ப்பும் சீர்குலையத் தொடங்கியது. சமூகக் கட்டுக்கோப்பு நெகிழத் தொடங்கியது. காலப் போக்கில் சமூகம் என்பது பெயரளவிலேயே இருக்க சமுதாய உணர்வும் பயன் அற்றதாய்விட்டது. அறிவியலால் சூழலை மட்டும் சுத்தப்படுத்தினாற் போதாது.

ஆன்மீக ரீதியிலான அகத் தூய்மையும் தேவை. ஆன்மா வைச் சுத்தஞ்செய்யும்போது சமூக உறவுகள் மலர வழி பிறக்கின்றது. ஒருவர் எவ்வளவு செல்வந்தராக இருந்தாலும் தனியாக வாழ முடியாது. அவனுக்கென்றொரு குடும்பம் உறவினர் நண்பர் என்று இருந்தாற்றான் வாழ்க்கை முழுமை பெறும்.

ஒரு அலுவலகத்தில் நேர்மையான செயலர்கள் இருந்தால் அந்த அலுவலகம் சிறப்பாக இயங்கும். வளம் பெருகும் வாழ்வு சிறக்கும். எந்த ஊரில் அறிவும் புலனும் பக்குவப்பட்ட அநுபூதிமான்கள் வாழ்கிறார்களோ அங்கு பகை இருக்காது. பல குழுக்கள் இருக் காது. போர் இருக்காது. அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும். இது ஒரு சிறந்த சமூகச் ± சூழல் ஒருவரை ஒருவர் புரிந்து கொள் வதற்கு அறிவியலைப் பெறுவ தற்கு ஆன்மீக சிந்தனை தேவை இன்று சகல நாடுகளிலும் பரவி வரும் கொலை கொள்ளை தற் கொலைகள் கற்பழிப்பு கவலைகள் அனைத்துக்குமே காரணம் எமது சமூக வாழ்க்கை ஆன்மீகம் சார்ந்த அறிவியலைக் கொண்டிராத தேயாகும்.

அன்பு என்பது சிறந்த வாழ்க்கை அமைவதற்காகப் போடப்படும் அத்திவாரமாகும். இதனாற்றான்

**அன்பும் அறனும் உடைத்தாயின்**
**இல்வாழ்க்கை பண்பும் பயனுமது**

என்கிறார் வள்ளுவர். இந்த அன்பு உயிர்ப்புள்ள ஆற்றல் மிக்க பண்பாகும். செலவின்றி வாரி வழங்கக்கூடிய ஒரு வஸ்து. இருந்தும் அன்பு செய்தலைக் குறிக்கோளாகக் கொண்ட அனை வருமே அல்லற்பட்டுள்ளனர். உதாரணமாகச் சிபிச்சக்கரவர்த்தி, அரிச்சந்திரன், தருமன், இராமன், இன்னோரன்ன பலரும் அன்பினால் துன்பப்பட்டவர்கள். இதுதான் உலக வாழ்க்கை. ஆனாலும் அவர்கள் புகழ் இன்றும் நிலைத்து நிற்கிறது. அறிவியல் சார்ந்த வாழ்க்கைக்கு அன்பே திறவுகோல்.

இவ்வாறிருக்க, ஆன்மா, புலன்கள், பொறிகள் ஆகிய கருவிகளுடன் கூடிய உடலுடன் வாழத்தொ டங்கிய நாள் முதல் பொருள் இன்றியமையாததாய் விட்டது. வாழ்வாங்கு வாழப் பொருள் தேவை. பொருளில் லார்க்கு இவ்வு லகம் இல்லை என்று ஏற்கனவே கூறியுள்ளோம். பொருள் என்பது இங்கே பணத்தைக் குறிப்பதன்று. உண்டு உடுத்து வாழ்வதற்கு பயன்படும் நுகர்பொருள்களையே குறிக்கும். இவற்றை நாம் உழைத்துப் பெறவேண்டும் இவை விலை மதிக்க முடியாத வை. ஆன்மீக வாழ்வில் பணத்தி ற்கு மதிப்பில்லை. வேளாண்மைத் தொழில் கால்நடை வளர்த்தல் ஆதியன பொருள் தரும் தொழில்களில் சிறந்தனவாகும். இதை விடுத்து பிறபொருள் அபகரித்தல் வட்டி மேல் வட்டி பெறல் ஆகியவை அறிவியல் சார்ந்த தொழில்கள் அல்ல. உழைப்பதற்கென்றே ஆண்டவன் இந்த உடலையும் இயற்கை வளங்களையும் படைக்கின்றான். உழைப்பின்மையாலே அறியாமை, வறுமை, நோய், கலகம், போர், ஆகியன நிகழ்கின்றன. இவற்றில் இருந்து விடுதலை பெற உழைப்புத் தேவை. இவ்வுழைப்பு சமூகத்திற்கு நலம்பயக்கும் உழைப்பாக இருக்க வேண்டும். உழைப்பதில் சுரண்டல் இருக்க க்கூடாது. சுரண்டிப் பிழைப்பவன் ஒருபோதும் நேர்மையான உழைப் பை விரும்பமாட்டான். தொழிலா ளியும் காலப்போக்கில் முதலாளியாக மாறும்போது முதலாளிகளின் சுரண்டல் போக்கை எதிர்த்துப் போராட வேண்டும். உழைப்பு வழியில் மட்டுமே பொருள் ஈட்டும் உரிமை மக்களுக்கு இருக்க வேண்டும். பிறர்பொருளை திருடிச் சொத்து சேர்க்கும் முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண் டும் . எந்த வகையிலும் சுரண்டிப் பிழைக்கும் செல்வந்தர்களை விட அறிஞனும் உழைப்பாளியும் தரம் குறைந்தவர்களல்ல. ஆனால் இன் றைய காலகட்டத்தில் சமுதாயத தை அலசிப்பார்க்கும் போது செல்வந்தர்களும் அரசியல் வாதி களும் சொல்லிக்கொள்ள எந்தவித தகுதியும் இல்லாவிட்டாலும் கூட அவர்கள் செய்யும் பஞ்சமாபா தகங்களை எல்லாம் மன்னிக்கத் தயாராக இருக்கின்றது. உலகம் இன்றைய கலாசாரம் வளரும் சமுதாயத்திற்கு ஏற்புடையதன்று. அறிஞர்களையும் விஞ்ஞா னிகளையும் உழைப்பாளிகளையும் மதிக்கும் மனப்பண்பு வளர்ந்தால் தான் இன்றைய உலகம் உருப் படும். இன்று மக்களிடையே வளர்ந்துள்ள பணமதிப்பீட்டு சமுதாயம் முற்றாக மாற வேண் டும். மனிதனை மனிதனாக மதிக்கும் மேம்பாட்டுச் சமுதாயம் உருவாக வேண்டும்.

அயலவன் துன்பப்படும்போது நாம் அவனுக்கு ஆறுதல் கூற வேண்டும். அவனது உள்ளம்

திருந்த உதவ வேண்டும். அவன் பட்டினியாக இருக்கும்போது நாம் அறுசுவை உண்டி உண்பது நெறியல்ல. அது பாதுகாப்பற்ற நிலையும் கூட அயலவன் விழித்தெழுந்தால் நமது நிலை பாதிக்கும். ஆகவே வாழ்வு அற நிலையில் கட்டி எழுப்பப் படவேண்டும்.

இப்படியான வாழ்க்கையை அப்பர் அடிகளும் அண்ணல் காந்தியும் எடுத்துக் கூறினார்கள். பாவேந்தர் பாரதி தாசனும் உலகம் உண்ண ஊண் உடுத்த உடுப்பாய் என்றார். மற்றவரகளுக்கு வழங்கி மகிழ்வித்து வாழப்பழக வேண்டும். அதனால் நாமும் இன்பம் அடைவோம்.

பொதுவாக நமது சாத்திரங்கள் பலவித கட்டுப்பா டுகளை விதிக்கின்றன. இன்றைய வாழ்க்கை முறைக்கேற்றபடி நெறிகளை ஏன் மாற்றி அமைக்கக் கூடாது என்று சிலர் வினவுகின்றார்கள். சரி..... மாற்றம் செய்வதென்று ஆரம்பித் தால் அதற்கு முடிவே இருக்காது அப்புறம் நமது உலகியல் சுகங்கள் சாத்திரம் என்றாகிவிடும். சாத்திரங்கள் கூறிய வண்ணம் முற்றாக நடப்பது சாத்தியமில்லை என்று நினைப்பதாலேயே எமக்கு அது சாத்தியமில்லாமல் போய்விடுகின்றன. நாகரீகம் என்ற பெயரால் நாம் எதை எதையோ எப்படியெல்லாமோ செய்துகொண்டிருக்கின்றோம். முதலில் நாம் எம்முடைய தேவைகளை குறைத்துக் கொண்டாலே போதும். இன்றைய உலகில் அவசியமற்ற பல தேவைகளை நாம் உண்டாக்கிக் கொள்கின்றோம். இவற்றைக் குறைத்துக் கொண்டாலே போதும். இப்படிக் குறைத்துக் கொள்ளும் போது ஆசாரங்களை விடவும் வேண்டாம். பணம் பணம் என்று அலையவும் வேண்டாம்.

இன்றைய காலகட்டத்தில் நமது குறிக்கோள் நோக்கம் அனைத்துமே எப்படிப் பணம் சம்பாதிப்பது என்பதிலேயே செலவிடப்படுகின்றது. இதை விடுத்து சற்று நேரம் இறைவனை நினைக்க எமது நேரத்தை செலவழிப் போமாக இருந்தால் வாழ்க்கையில் திருப்தியும் நிம்மதியும் ஏற்படும். இந்துமத தத்துவங்களை சிறப்பாக கூறும் சிறந்த உபதேசம் பகவத்கீதை. மகாபாரதத்தின் ஒரு அம்சமாக இது அமைந்துள்ளது. உன்னதமான உண்மைகளைக் கூறுவதற்கு கண்ணன் ஏன் போர்க்களத்தை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது சில பகுத்தறிவாளர்களின் வினா? கண்ணனும் அர்ச்சுனனும் பல ஆண்டுகள் அந்நியோன்னியமாக பழகியவர்கள் தானே. இந்த உபதேசங்களைச் செய்வதற்கு எத்தனையோ இடங்கள் இருக்க போர்க்களத்தை ஏன் தெரிந்து எடுத்தார்கள் என்று சிந்திக்கத் தோன்றுவது இயற்கை. அர்ச்சுனனும் கண்ணனும் நண்பர்களாகப் பழகியவர்களாயினும் அர்ச்சுனன் போர்க்களத்தை அடைந்த போது எதிர் அணியில் நின்றவர்களைப் பார்த்தபோது அவன் மனம் வேதனையால் கலங்கியது. அங்கே நிற்பவர்கள் சாதாரண மக்களல்ல. அவனது சகோதரர், ஆசிரியர் நண்பர், உறவினர். ஆகியோராவர். ஆகவே போர்க்களத்தில் அவர்களைப் பார்த்ததும் தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்பதற்கிணங்கி அவனிடம் அதுவரை இருந்த வீரமும் துணிவும் விடைபெற்றுச் சென்றன. வில் அவனை அறியாமல் கைநழுவிக் கீழே விழுந்தது. அவன் உடனே தன் நண்பன் கண்ணனை நோக்கி கண்ணா! நீ தான் இவ் இக்கட்டான நிலையில் புத்தி கூறவேண்டும் என்று கண்ணனிடம் சரணாகதி அடைந்தான். அந்த வேளையில் தான் கண்ணன் அவனுக்கு குருவாகத் தென்பட்டான். உபதேசம் கேட்கும் பக்குவம் அப்போது தான் அவனுக்கு உண்டாகியது. அருச்சுனன் குழப்பம் நீங்கித் தெளிவு பெறவும் பலன் பெற்றுத் தொழிற்படவும் தேவையானதை அப்போது தான் கண்ணன் உபதேசித்தான். கீதை உபதேசம் அர்ச்சுனனுக்காக மட்டும் தனிப்பட்ட முறையில் செய்யப்பட்டதல்ல. உண்மையை அறிந்து தெளிவு பெற விரும்புகிறவர்கள் எல்லோருக்குமாக செய்யப்பட்டது. ஆனால் இன்று இந்து மதத்தினரிடம் இருக்கும் பெரிய குறைபாடு என்னவென்றால் உண்மைகள் தத்துவங்கள் அதிகமாக உள்ள எம் மதத்தை எம்மவர் படித்து உணர்ந்து பயன்பெற முயற்சி எடுப்பதில்லை என்பதாகும். எம்மதத்தின் தத்துவங்கள் உண்மைகள் துளித்துளியாக பிறரால் சுரண்டப்பட்டு களவாடப்பட்ட பின் அவற்றை சுலபமான முறையில் எம்மதத்தவர்களுக்கு சீனி கலந்தூட்டி தம் மதத்தில் சேர்த்துக்

கொள்கின்றனர். எமது தேவாரங்கள் பிள்ளைத் தமிழ்கள் ஆற்றுப் படைகள் நீதி வெண்பாக்கள், திருவாசகங்கள் எல்லாம் இப்படிப் போய்க் கொண்டே இருக்கின்றன. நாம் என்ன வென்றால் இன்னும் எம் மதத்தைப் பற்றி ஆராய்ச்சி பண்ணிக்கொண்டேயிருக்கின்றோம். ஆலயங்களில் கூட அர்ச்சனை பூசை அபிஷேகம் என்பன பணத்திற்காகவே செய்யப்படுகின்றன. சில ஆலயங்களில் குறிப்பிட்ட இவ்வளவு ரூபாவுக்கு குறைய அர்ச்சனையோ அபிஷேகமோ செய்ய மறுக்கின்றார்கள். இதனால் அல்லல் படும் ஏழைகள் ஐந்து குழந்தைகள் இருந்தால் ஆளுக்கு ஐந்தோ பத்தோ கொடுத்து அர்ச்சனை பண்ண முடியுமா. அவர்கள் வெளியே நின்று மலரைவாயிலில் போட்டு அர்ச்சித்து விட்டுப் போகின்றார்கள். ஒரு சிலர் வேறு மதங்களில் சேர்ந்தும் விடுகின்றார்கள்.

**ஆ வுரித்து தின்கின்ற புலையரேனும்**
**கங் கைவார்சடைகரந்தார்க் கன்பராகில**
**அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே**

என்று பாட நாவுக்கரசரும் தற்போதில்லை.

**உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்.**

என்று பாட வள்ளலாரும் இல்லை.

அவர்கள் காட்டிய வழியிலாவது நடக்க நல்ல வழிகாட்டிகளுமில் லை. ஆகவே இப்படியான பண்புகளைச் சிறார்களிடம் வளர்க்க வழிவகுக்கப்பட வேண் டும்.

தற்காலத்தில் ஆலயங்களில் தேவா ரம் பாடுபவர்கள் பண் தவறாமல் இராகம் பிழைக்காமல் தாளம் சரியாக அமைய பாடுவதிலேயே தமது புலனைச் செலவழிக் கிறார்களே தவிர கருத்தொன்றிப் பொருள் விளங்கிப் பாடுவது மிகவும் குறைவாகவே உள்ளது.

ஜனநாயகத் தத்துவம் முதலில் கிறீஸ் நாட்டிற்றான் பிறந்ததாக எல்லோரும் எண்ணுகின்றார்கள்.

ஆனால் உண்மையில் நமது வேதமே அதைத்தான் அரசியற் தத்துவமாக கொண்டுள்ளது. தனிநபர் வாழ்க்கை குடும் வாழ்க்கை சமுதாய வாழ்க்கை தேசிய வாழ்க்கை பற்றி எல்லாம் வேதம் கூறுகிறது. ஆளும் மக்கள் ஆளப்படுவோர் என்று இரண்டாகப் பிரித்து இந்த இரண்டுக்கும் உதவி செய்ய ஒரு தெய்வீக அதிகாரத்தை வேதம் கூறுகிறது. அரசியற் சக்தி மக்களிடமிருந்தே உருவாகிறது. மக்களது கருத்தைத் தெரிந்து கொள்ள அரசியல் சபைகள் அப்போதே இருந்தன. சபையிற் கலந்து கொண்டே அரசன் அவர்கள் கருத்துக்களை அறிகிறான். ஆனால் அவன் தனது கருத்தை அங்கே உடனடியாகக் கூறமுடியாது. சபையை நிர்வகிக்க சபாபதி என்றொருவர் இருப்பார் என ரிக் வேதம் கூறுகின்றது. எந்த இடத்தில் எல்லோரும் சமமாக இருக்கிறார்களோ அது தான் சபை. பெரும்பான்மை சிறுபான்மை என்றிராமல் சபையின் முடிவுகள் ஒருமனதாக இருக்க வேண்டும் என்றும் வேதம் கூறுகிறது. பல்வேறு தொழில் புரியும் பிரதிநிதிகளும் சபையில் இருப்பர்.

இதைத்தவிர சமிதி என்ற மேற்சபையும் இருந்தது. அரசர்கள் சபையைக் கூட்டி ஆலோசனை செய்த பிறகே எக்காரியத்தையும் தொடங்குவர் என்று வேதம் கூறுகிறது. அரசியலில் மக்களே முக்கியமானவர்களாக இருந்துள்ளார்கள். வேதத்தில் மக்களின் சபை பற்றி மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர மந்திரி சபை பற்றி எதுவும் கூறப்படவில்லை. அரசர் தம்மிச்சைப்படி நடக்க வேதம் அனுமதிக்கவுமில்லை. இதை எல்லாம் அறிந்து கொள்ளாமல் அரசியல் தத்துவம் எங்கோ பிறந்து நம் நாட்டுக்கு வந்ததாக நாம் கருதுகின்றோம். மனிதனாகப் பிறந்தவனுக்கு எத்தனையோ பாக்கியங்கள் உள்ளன. அவற்றில் எல்லாம் மேலான பாக்கியம் மனித சமுதாயத்திற்கு சேவை செய்வதே.

இது தான் ஆன்மீகம் கலந்த அறிவியல் திருமூலரும்,

**"நடமாடாக்கோயில்**
**நம்பர்க் கொன்றீயின்**
**படமாமாய் பகவதற்கதாமே "**

என்று பாடியுள்ளார். இதன் அர்த்தம் மக்களுக்கு செய்கின்ற உதவி சாட்சாத் ஈஸ்வரனுக்கு செய்கின்ற பூசையே என்பதாகும். நாமும் இவ்வழிகளைப் பின்பற்றி ஆன் மீகம் கலந்த அறிவியல் வாழ்க்கை வாழ்வோமாக!






# SHARAD'S

தாலிக்கொடி, பூரான் அட்டியல், கல் அட்டியல், பதக்கம், கைவளையல், மோதிரம் ஆகிய அனைத்து நகைகளும் தரமான 22கரட்டில் அரச முத்திரையுடன்குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

**4 St.Stephen's Parade**
**Green Street, Uptonpark,**
**London E7 8LQ**
**Tel: 0181 552 5718**

# VARSHI'S SUPER STORE

VARSHI'S
SUPER STORE

லண்டனில் உங்கள் வீட்டுத் தேவைகளுக்கான ஓடியோ, வீடியோ, சீடீக்களைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

**தேசிய லாட்டரிச் சீட்டுகளும் விற்பனையாகின்றன.**

***FIRST AND THE BEST TAMIL SHOP IN NEW MALDEN***

**99, BURLINGTON ROAD, NEW MALDEN,**
**SURREY KT3 4LR**

**TEL : 0181 336 0061**

## அணங்கினர் ஆயம்

அணங்கினர் ஆயத்தை
இறையருள்பெற்ற மகளிரும்
இறையடியார்களின் அருட்கனிவில்
திளைத்தும் நம்மலர்களால்
அறியப்படாத மாதரும் பொலிவிப்பர்.
அவற்றுடன் பெண்கள் விரும்பும்
கலைகளும் அதிற் சிறந்து விளங்கிய
பாடல்களும் சிறு குறிப்புகளும்
அலங்கரிக்கும்
–சாலினி–

# மனைவியெனும் அருளமுதம்

கன்னித் தமிழ்நாட்டில், காவிரியாறு கடலோடு கலக்கும் காவிரிப்பூம்பட்டினத்தில் கண்ணகி எனும் கற்பரசியின் காற்சிலம்பு சிரித்தது. வடநாட்டிலோ கங்கை ஆற்றங்கரையில் கனகவிசயரென்னும் முடியுடை வேந்தர்களின் தலைகள் கல் சுமந்து நெரிந்தன. இதனையே சிலப்பதிகாரம் சித்தரிக்கின்றது.

காவிரிப் பூம்பட்டினத்தில் பெருஞ் செல்வர்களான மாநாய்கன் மகளுக்கும் (கண்ணகி) மாசாத்துவான் மகளுக்கும் (கோவலன்) திருமணம் நடந்தது. கண்ணகியின் கொஞ்சும் சிலம்பொலியில் நெஞ்சம் நெகிழ்ந்தான் கோவலன். கண்ணகி மேல் தீராக் காதல் கொண்டான். மனையறம் இனித்தது. சில ஆண்டுகள் சீராகச் சென்றன.

கோவலன், மாதவியின் ஆடற் சிலம்பொலி கேட்டான். கண்ணகியின் கொஞ்சும் சிலம்பொலியை மறந்தான். கலையரசியின் காதற் சிலம்பொலியில் கட்டுண்டான். காலம் உருண்டது. காசும் கரைந்தது. காதற் சிலம்பொலியே அவனுக்கு புலம்பற் சிலம்பொலியாயிற்று. பாடினான் கானல்வரி.

*கானல்வரி பாடல்கேட்ட மான்நெடுங்கண் மாதவியும்*
*மன்னும் ஓர் குறிப்புண்டு இவன் தன்நிலை மயங்கினான் எனக்*
*கலவியான் மகிழ்ந்தான் போல் புலவியால் யாழ்வாங்கித்*
*தானும் ஓர் குறிப்பினள் போல் கானல்வரிபாட......*

மாதவிமேல் சீற்றம் கொண்டு மீண்டும் கண்ணகியிடம் சென்றான் கோவலன்.

*சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடிக்*
*குலம்தரு வான்பொருட் குன்றம் தொலைந்த*
*இலம்பாடு நாணுத் தரும் எனக்கு......*

வஞ்சனையை வாழ்வாகக் கொண்டவளோடு இவ்வளவு காலமும் கழித்தமையால் முன்னோர் தேடிக் கொடுத்த பெருஞ் செல்வத்தை தொலைத்துவிட்டேன். என் வறுமைக்காக வெட்கப்படுகின்றேன் என்றான் கோவலன்.

இதனைக் கேட்ட கண்ணகி தன் காற்சிலம்பை எடுத்து அவன் கையிற் கொடுத்து இச் சிலம்புகளை விற்று வரும் பணத்தை வைத்து இழந்த செல்வத்தை தேடிக் கொள்ள முடியும் எனத் தைரியம் ஊட்டுகின்றாள். தன் வறுமை நிலைக்கு வெட்கப்பட்ட கோவலன் இரவோடு இரவாக கண்ணகியைக் கூட்டிக் கொண்டு மதுரைக்கு விரைகின்றான்.

மதுரை நகரிலே பொற் கொல்லர் தெருவிலே கண்ணகியின் காற்சிலம்பை விலைகூறி விற்க முயல்கிறான் கோவலன். கண்ணகியின் காற்சிலம்பு பொற்கொல்லன் ஒருவனின் சூழ்ச்சியால் கள்ளச் சிலம்பாய் புலம்ப கொலை செய்யப்பட்டான் கோவலன். கள்ளச் சிலம்பொலிகேட் டு கலங்கினாள் கண்ணகி.

*பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே யாமாகில்*
*ஒட்டேன் அரசரோடு ஒழிப்பேன் மதுரையையும்*

என வஞ்சின முரைக்கின்றாள். ஒற்றைச் சிலம்பொலிக்க கொற்றவனிடம் சென்று நீதிகேட்டாள். காவி உகுநீரும் கையில் தனிச்சிலம்பும்

*ஆவி குடிபோன அவ்வடிவும் – பாவியேன்*
*காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டு அஞ்சிக்*
*கூடலான் கூடுஆயினன்.*

முத்துடைச் சிலம்பொலிக்கும் மணியுடைச் சிலம்பொலிக்கும் வேற்றுமை அறியா கொற்றவன் முன்னே சிரித்தது சிலம்பு. பறந்தன மணிகள். இறந்தனன் மன்னன். எரிந்தது மதுரை.

தன்னை மறந்து ஓர் ஆடலரசியுடன் வாழ்ந்த தன் கணவனுக்காக நீதி கேட்டு மதுரையையே எரித்து பத்தினி எனப் போற்றப்பட்டவள் கண்ணகி. சோழ நாட்டில் பிறந்து பாண்டிய நாட்டில் வழக்குரைத்து சேர நாட்டில் தெய்வீகமுற்றவள் கண்ணகி.

எனவே சேர, சோழ, பாண்டிய நாடு என மூன்று கூறுபட்டுக் கிடந்த தமிழ் நாட்டை ஒன்றாக்கிய பெருமையும் கண்ணகிக்கு உண்டு.

வடநாட்டு அரசர்களான கனக விசயர் சுமந்து வந்த கல்லில் அவளுக்கு சிலைவடித்து கோயில் கட்டி மகிழ்ந்தான் சேரமன்னன். அன்றுமுதல் பத்தினித் தெய்வமாய் கண்ணகி அம்மனாய் போற்றப் பட்டாள் கண்ணகி.

தமிழகத்தில் கண்ணகி வழிபாடு அருகி வந்து கொண்டிருப்பினும் ஈழத்தின் புங்குடுதீவுக் கடற்கரையில் கம்பீரமாகக் கோயில் கொண்டிருக்கிறாள் கண்ணகி. இந்தக் கண்ணகி அம்மன் கோயில் ஈராயிரவருட பழமை யானது. நாக அரச வம்சத்தில் வந்த முகநாகன் என்பவன் கி.பி. 2ம் நூற்றாண்டில் கண்ணகி கோட்டத்திற்கு (இக் கோயிலுக்கு) தினசரி செலவுக்கு பொருள் கொடுத்திருக்கின்றாள்.

***"கன்னலொடு செந்நெல் விளை கண்ணகிப் பொன்னரசியே"***
என முத்துக் குமாரசுவாமிப் புலவராலும்

***"வண்ண வண்ண சேலை கட்டும் மீனாட்சி"***
என யாழ்ப்பாணம் வீரமணி ஐயராலும் போற்றப்பட்டவள் இந்தக் கண்ணகி அம்மன். மனைவி எனும் அருளமுதமாக வாழ்ந்து தெய்வமாகப் போற்றப்படுபவள் கண்ணகி.

★ ★


**SHAMA'S CENTRE**

உங்களுக்குத் தேவையான
வீட்டுப்பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
அலங்காரப் பொருட்கள்
சாறி பிளவுசுகள், சாரங்கள்
உடைகள், கைப்பைகள்
ஆகியவற்றை சில்லறையாகவும்
மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள விரையுங்கள்


**212 High Street North**
**East ham, London E6 2JA**
**Tel: 0181 548 8466**

**SOLANKI CHEMIST**

* Free Prescription Collection & Delivery Service
* Home visits to Housebound
* Pregnancy testing
* Computerised Patient Medication Record.
* Pharmacist always available for service.

**OPEN SEVEN DAYS A WEEK**

Opening Hours
Monday to Saturday
9.00am to 9.00pm
Sundays & Bank holidays
10.00am to 1.30pm




TEL: 0181 472 2901
324 HIGH STREET NORTH
MANOR PARK
LONDON E12

உங்கள் மருந்துத்தேவைகளை இங்கே நிறைவு செய்யுங்கள்

# இந்தியாவிலும் இலங்கையிலும்
# பல்லாண்டு காலம் புகழ் பெற்ற
# LKS
# நகைமாளிகையின் மற்றுமொரு கிளை




# SIA
## GOLD HOUSE

**338 HIGH STREET NORTH, MANOR PARK, LONDON E12 6QB**

# TEL: 0181 470 8282

தமிழர்களின் தங்கநகை மாளிகை.

# ஆண்-பெண் பேதம் ஆன்மாவுக்கு உண்டா?

செ. சிறிக்கந்தராசா

ஆண்பால், பெண்பால் என்ற அடிப்படையிலோ வெள்ளைத்தோலா, கறுப்புத்தோலா, ஆரியனா, திராவிடனா, நீகிரோவா, மொங்கோலியனா என்ற அடிப்படையிலோ, அந்தச் சமயத்தவனா, இந்தச் சமயத்தவனா , என்ற அடிப்படையிலோ பாகுபாடு காட்டக்கூடாது என்று இன்றைய உலக மனித உரிமைச் சட்டம் பறையடிக்கின்றது. உயிரெல்லாம் ஒன்றே! அதற்குப் பாலுமில்லை, தோலுமில்லை, இனமும் இல்லை, மொழியுமில்லை, மதமுமில்லை என்று அன்றே இந்து சமயம் விளம்பிவிட்டது. இதனாலேதான் இந்து சமயத்தை இரட்சித்துத் திருத்தவந்த புத்த சமயத்தைப் போற்ற என எழுந்த மணிமேகலை **ஊனெடுத்த உயிர்க்கெல்லாம் உதவி செய்க** என்று பேசியது. சைவ சித்தாந்த தத்துவத்தின்படி பதி, பசு, பாசம் என்ற மூன்றும் என்றும் உள்ளவை.

பதிக்குப் பேருயிர் என்று பெயர். பசுவுக்குச் சிற்றுயிர் என்று பெயர். பதியைச் சிவன் என்றார்கள். பசுவைச் சீவன் என்றார்கள். சீவனில் உள்ள அழுக்குப் போனால், சீவனும் சிவனாகும் என்றார்கள். இதனையே **மனிதனும் தெய்வமாகலாம்** என்ற சொற்றொடரால் சொன்னார்கள். மாசு மறைந்தால், மாசு நீங்கிய சீவனின் பண்பும் மாசற்ற சிவனின் பண்பும் ஒன்றே என்றார்கள். ஆகவே சிவனின் பண்பு என்ன என்பதைத் தெரிந்து கொண் டால் சீவனின் பண்பைத் தெரிந்தவர்கள் ஆவோம். அதாவது பதியின் இலட்சணத்தைப் புரிந்து கொண்டால் பசுவின் உள்ளார்த்த பண்பைப் புரிந்தவர்கள் ஆவோம்.

**ஒருநாமம் ஓருருவம் இல்லாத பேருயிர்க்கு**
**ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளேணம்**
**கொட்டுகின்றோம்** நாங்கள்.

**புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியாஉன்னடிஎன்மனத்தே**
**வழுவாதிருக்க வரந்தரல்வேண்டும் இவ் வையகத்தே**
**தொழுவார்க் கிரங்கி இருந்தருள்செய் பாதிரிப்புலியூர்**
**செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த**
**திருவண்ணனே**

என்று திருநாவுக்கரசர் பாடிய திருவிருத்தம் ஒன்று உண்டு. உயிர்கள் பிறவிதோறும் உடம்பெடுக்கும்போது புழுவின் உடம்பை எடுத்துப் புழுவாகவும் பிறக்கக்கூடும் என்ற சைவ சித்தாந்த உண்மையை அப்பர் மேற்படி தேவாரத்தின் மூலம் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

**புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி**

என்று மணிவாசகர் பாடியதன்மூலம் உயிர்கள் புழுவாகவோ பாம்பாகவோ பறவையாகவோ வேறுமிருகங்களாகவோ பிறப்பெடுக்கலும் கூடும் என்பதை மணிவாசகர் உணர்த்தியிருக்கின்றார். ஆண்பெண் என்ற பேதம் பெரும்பாலான உயிரினங்களில் இருக்கின்றபோதும் சில உயிரினங்களில் அந்த ஆண்பெண் வேறுபாடு இல்லை. (ஆண்பெண் என்ற வேறுபாடு சில மரங்களிலும் செடிகளிலும் இருந்தபோதிலும் பல மரங்களில் அந்த வேறுபாடு இல்லை.)

மனிதன் தன்னை ஆறறிவு படைத்தவனாகக்கூறி உயிரினங்களுக்குள் மேம்பட்டவனாகக் காட்டிக் கொள்ள விழைகிறான். ஆனால் மனித நிலைக்குக் கீழ்ப்பட்ட நிலை என்று கொள்ளப்படுகின்ற குரங்கு நிலைக்குரிய அநுமன்கூடச் சீதையின் ஆசியாலும் இராமனின் வாழ்த்தினாலும் வானோர்க்குயர்ந்த வையம் புகுந்தான் என்று புராண இதிகாசங்கள் பேசும். வாலி என்ற குரங்கினத் தலைவன் பூசித்த தலம் வாலீச்சரம் என்று போற்றப்பட்டு வருவதாகத் தலபுராணங்கள் கூறுகின்றன. இவை மட்டுமா? ஓரறிவுயிர்கள் தொடங்கி ஐந்தறிவுயிர்கள் வரையுள்ள உயிர்கள் எல்லாம் இறையை வழிபட்டு மோட்சம் அடைந்தாகத் திருத்தல வரலாறுகள் விளம்புகின்றன.

திருசிராப்பள்ளியில் அமைந்துள்ள திருவானைக்காவில் யானையும் சிலந்தியும் பூசனை செய்து உயர்ந்ததாக வரலாறு உண்டு.

எறும்பு பூசித்து உய்வுபெற உதவிய தலம் திருவெறும்பியூர். நண்டு பூசித்து உய்ந்த ஊர் திருநின்றஊர். பசு வழிபட்டு விடுபாடு பெற்ற தலம் திரு ஆன்மியூர் என்ற திருவான்மியூர். புள்ளினால் (பறவையினால்) வழிபாடு செய்யப்பட்ட திருத்தலம் புள்ளிருக்கும் வேளூர். இவ்வாறாகச் சிற்றறிவுயிர்களும் ஆண்பெண் வேறுபாடற்ற உயிர்களும் மோட்சம் பெற்றன என்று தலபுராணங்கள் சாற்றுகின்றன. இந்த உண்மைகளை வடலூர் வள்ளலார் அவர்களும் அவர்களது திருவருட்பாவிலே அழுத்திக் கூறுகின்றார். அந்தத் திருவருட்பா பின்வருமாறு.

**ஆடும் கரியும் அணிலும் குரங்கும்அன்பு**
**தேடும் சிலம்பியொடு சிற்றெறும்பும் – நீடுகின்ற**
**பாம்பும் சிவார்ச்சனைதான் பண்ணியதென் றாற்பூசை**
**ஓம்புதற்கியார் தான் உதவா தார்**

என்கின்றது அந்தப் பாடல்.

இதிலிருந்து நாம் அறியக் கிடக்கின்றது என்னவென்றால் பிறப்பறுப்பதற்கு மனிதப்பிறவி வேண்டியதில்லை என்பதே. மனிதர் அல்லாதவர்களும் அவரவர் நிலையில் அல்லது அதனதன் நிலையில் நின்று ஆவன ஆற்றிப் பிறப்பறுப்பதற்கான நிலையை இறைவன் வழங்கியிருக்கின்றான் என்பதே இதிலிருந்து தெளிவாகின்றது.

இந்து சமயம் தவிர்ந்த சமயங்கள் பரம் பொருளான இறை ஆண் என்று அறைந்து கூறும். இந்து சமயம் மட்டும் இறைவன் என்ற பேருயிர்க்கு ஆணும் அல்லப் பெண்ணும் அல்ல என்று பேசும். இந்த உண்மையைத் துலக்க வந்த தேவார திருவாசகங்கள் பின்வருமாறு பேசும்.

**ஆணோ பெண்ணோ அரிவையோ என்றிருவர்**
**காணாக் கடவுள் கருணையினால் தேவர் குழாம்**
**நாணாமே உய்ய ஆட்கொண்டருளி நஞ்சுதனை**
**ஊனாக உண்டருளும் உத்தரகோ சமங்கைக்**
**கோணார் பிறைச் சென்னிக் கூத்தன் குணம்பரவிப்**
**பூணார் வனமுலையீர் பொன்னூசல் ஆடாமோ**

---

**உண்டொர் ஒண்பொருள் என்றுணர் வார்க்கெலாம்**
**பெண்டிர் ஆண்அலி என்றறி யொண்கிலை**
**தொண்டனேற் குள்ளவா வந்து தோன்றினாய்**
**கண்டும் கண்டிலேன் என்னகண் மாயமே**

இவ்வாறாக பேருயிராகிய பரமாத்மாவுக்கு ஆண்பெண் அலி என்ற பாகுபாடு இல்லாதது போலவே சிற் றுயிராகிய சிற்றாத்துமாவுக்கும் ஆண் பெண் அலி என்ற பாகுபாடு கிடையாது. ஆண், பெண், அலி என்ற பாகுபாடு உடம்பைச் சார்ந்ததேயொழிய உயிரைச் சேர்ந்ததல்ல. ஆணவமலத் தொடர்பினால் அறிவிழந்து கிடக்கின்ற ஆன்மாவுக்கு அதற்கே இயல்பான அறிவைத் திறந்து காட்டிச் சீவனையும் சிவனாக மாற்றுவதற்காகக் கருணைப் பெருங்கடலாகிய பேராத்மா, பிரகிருதி மாயையிலிருந்து இந்த உலகத்தைத் தோற்றுவித்து சிற்றாத்துமாவுக்குத் தனு, கரண போகங்களையும் கொடுத்தார். உடலைக் கொடுத்த உயிரின் ஈடேற்றத்துக்காகச் சில உயிர்களுக்கு ஆண் உடலையும் வேறுசில உயிர்களுக்குப் பெண்ணுடலையும் கொடுத்தது பேராத்மாவின் செயல். உடலைப் படைத்துப் பால் பாகுபாடு செய்யும் ஆற்றல் உண்டேயொழிய உயிரைப் படைத்தவர் பேராத்மா அல்ல என்பது நாமறிந்ததே. ஆக உயிரை ஆண் உயிர் என்றும் பெண் உயிர் என்றும் பேசுவது இந்து தத்துவத்துக்கு மாறானது.

ஆண் பெண்ணுக்குச் சமன், ஆண் பெண் என்ற பாகுபாடு இருக்கக்கூடாது என்றெல்லாம் இப்போது மேற்குநாடுகளிற் சட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன. அரசியற் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் தொடங்கிப் புரட்சிகரமான சட்டங்களும் சீர்திருத்தங்களும் இப்போது சமயத் துறையிலும் புகுந்துவிட்டன. கிறித்தவ ஆலயங்களில் பெண்களும் பூசை செய்யலாம் என்ற நிலைமை உருவாகியுள்ளது. அதாவது உயிர் என்று பார்க்கும்போது இறைவன் முன்னிலையில் பெண்ணுடம்பு பெற்ற உயிரும் ஆணுடம்பு பெற்ற உயிரும் ஒன்றே என்பதை இப்போது மேற்குலகமும் மேற்குலகச் சமயமான கிறித்தவமும் ஒப்புக் கொள்ளத் தலைப்பட்டிருக்கின்றன.

இந்து சமயத்தைப் பொறுத்தவரையில் பெண்களும் இறை பணி புரியலாம், பூசனை செய்யலாம் என்ற நிலைமை அன்றே இருந்தது என்பதற்குத் திருவிளை யாடற் புராணத்திலும் பெரிய புராணத்திலும் சான்றுகள் இருக்கின்றன. தொடக்க காலத்தில் திருக் கோவில்களில் கோத்திரம் குலம் இனம் சாதி என்ற வேறுபாடின்றி அனைவரும் பூசிக்கலாம் என்ற நிலைமை இருந்தது.

**இதோ ஒரு காட்சி:**

திருப்பனந்தாள் திருக் கோயிலில் எழுந்தருளியுள்ள இறையை, தாடகைப் பிராட்டியார் தாமே மலரெடுத்துத் தொடுத்த மலர்மாலை கொண்டு பூசித்து வருகின்றார். அவரது பூசனை அன்பில் மகிழ்ந்த பரம்பொருள் தாடகையாரின் அன்பை அநுபவித்து மகிழவும் அவரது பத்தியின் உத்தமப் பண்பை உலகுக்கு உணர்த்தவும் வேண்டுமென்று ஆசை பிறந்தது இறைக்கு. தாடகையார் வழமைபோல் ஒரு நாள் தாம் தொடுத்த மலர் மாலையை இறைவனுக்குச் சார்த்தப் போனபோது பிராட்டியாரின் இடுப்பில் இருந்த ஆடை நெகிழ்ந்து வழுவத் தொடங்கியது. தாடகையாருக்குச் சங்கடமான நிலை ஏற்பட்டது. தாடகையாரின் சங்கடத்தை உணர்ந்த இறை உடுக்கை இழந்தவனுடைய கைபோல விரைவாகச் செயற்பட்டது. இறையாய் அமைந்திருந்த சிலை உடனே கனிந்து பிராட்டியாரின் கையில் இருந்த மாலையை ஏற்று தாடகையாரின் கை உடுக்கையை உடுக்க உதவியது. இவ்வாறு அடியாருக்காக அங்கத்தை இங்கிதமாக வளைத்த இறை வளைந்த நிலையிலே இருந்துவிட்டது என்பது புராணச் செய்தி. வளைந்த இறைவனைப் பின்னர் குங்கிலியக் கலய நாயனார் அவரது பக்திப் பண்பினால்

நிமிர்த்தினார் என்பது புராண வரலாறு. புரோகிதரின் தலையீடின்றிப் பெண்களும் நேரடியாக வழிபாடு செய்து உய்ந்தனர் அன்று என்பதையும் இன்றும் அந்த நிலை நிலவத் தடங்கல் எதுவும் இருக்கக் கூடாது என்பதற்காகவே மேற்படி கதையை எழுத நேர்ந்தது.

தேவார திருவாசகங்களையும் பெரியபுராணம், திருவிளை யாடற் புராணம் ஆகியவற்றையும் அலசிப் பார்த்தோ மானால் இறையை வழிபட்ட அடியார்கள் புரோகிதர்களின் இடையீடின்றிக் கோவிலில் வழிபட்டார்கள் என்பது புலனாகும்.

**மாதர்ப் பிறைக் கண்ணியானை**
**மலையான் மகளொடும் பாடி**

என்ற பாடலைப் பார்க்கின்றபோது அடியார்கள் புனலும் பூவும் ஏந்தியபடி ஒருவர்பின் ஒருவராகச் சென்று வழிபட்டார்கள் என்ற உண்மை துலங்குகின்றது. பெரிய புராணத்தின்படி பார்த்தால் திருச்சாத்தமங்கையில் வாழ்ந்துவந்த திருநீலநக்க நாயனார் என்ற பெரியவர் தமது மனைவியுடன் போய் அயவந்தீச்சுரத்தில் எழுந்தருளியுள்ள இறைவனுக்கு அபிஷேகம் செய்து திருவமுது செய்வித்து வழிபாடு செய்தார்கள் என்பதை அறிகின்றோம். இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது அந்தக் காலத்தில் சமயத் துறையில் ஆண்களுக்கு இருந்த உரிமை எல்லாம் பெண்களுக்கும் இருந்தன என்பதையும் அறிகின்றோம். எழுத்துக்களை உயிர் எழுத்துக்கள் என்றும் மெய் எழுத்துக்கள் என்றும் பிரித்ததோடு நில்லாமல் உயிரும் உயிரும் சேரும் போது எழுத்துக்கள் எவ்வாறு புணரும் என்று மொழியிலேயே சமய தத்துவத்தை அடிப்படையாகப் புகுத்திய பெருமைக்கு உரியவர்கள் தமிழர்கள் என்று, கலச வாசகர்களுக்கு முன்பொருமுறை கூறியிருக்கிறேன்.

திருவருட் பயன் என்ற மெய்கண்ட சாத்திரத்தை எழுதிய உமாபதிசிவாசாரியார் சிற்றுயிரும் பேருயிரும் புணர்ந்து இரண்டற்ற அத்துவித நிலையில் நிற்கும்போது எவ்வாறு நிற்கும் என்பதை விளக்குவதற்கு ஒரு சூத்திரம் யாத்துள்ளார்.

**தாடலைபோல் கூடியவை தான்நிகழா வேற்றின்பக் கூடலை நீ ஏகமெனக் கொள்**

என்பதுதான் அந்தச் சூத்திரம்.

தாள் என்பது ஒரு தமிழ்ச் சொல் தலை என்பது இன்னொரு தமிழ்ச் சொல் இந்த இரண்டும் தனிச் சொற்கள். இவை இரண்டும் புணர்ந்தால் தாடலை என்று ஒரு சொல்லாகும். தாடலை என்று ஒரு சொல்லாக நின்றாலும் அந்தச் சொல்லுக்குள் தாள் – தலை என்ற இரண்டு சொற்கள் ஒளிந்து நிற்கின்றன.

சிற்றுயிரும் பேருயிரும் புணர்ந்து ஒன்றாக இருக்கின்ற நிலை தாடலை போன்ற நிலைதான். இறையென்ன பேருயிரின் தாளில் (பாதத்தில்) பசு என்ற சிற்றுயிரின் தலை சேர்ந்து நிற்கின்ற இரண்டற்ற (அத்துவித) நிலைக்குத் தாடலை நிலை என்று பெயர். இந்தத் தாடலை நிலையைப் பெண்ணுடம்பு எடுத்து வினை மாசு நீங்கி மலபரிபாகம் பெற்ற உயிரும் அடையலாம். ஆணுடம்பு எடுத்து அவ்வாறே மலபரிபாகம் பெற்ற உயிரும் அடையலாம். இது தான் சைவ சித்தாந்த தத்துவம். அர்த்தநாரீசுவரராகக் காட்சியளிக்கின்ற இறை உணர்த்துகின்ற தத்துவம் பதி பசு என்பவற்றுக்கு ஆண் பெண் என்ற பாகுபாடு இல்லை என்பதே. இந்துக்களின் இந்தத் தத்துவம் நினைந்து நினைந்து மகிழ வைக்கும் நிரந்தரமான தத்துவம்.

★★

*திருஞானசம்பந்தர் நாயக நாயகி பாவத்தில் இறைவனைப் பாடும்போது கிளியைத் தூது விடுவது போல, சிறையாரும் மடக் கிளியே என்று தேவாரம் பாடியுள்ளார். இறையை ஆணாகவும் தம்மைப் பெண்ணாகவும் பாடும் மரபு அக்காலத்தில் இருந்ததை இதிலிருந்து காணலாம்.*


DLA
DISABILITY LIVING ALLOWANCE

கடுமையான மனநோயால் உங்கள் வாழ்வு பாதிக்கப்பட்டிருக்கின்றதா?

மார்புவலி, முதுகுவலி, இடுப்புவலி அல்லது நடப்பது கடுமையாக உள்ளதா?

மேற்கூறிய கேள்விகளுக்கு உங்கள் விடை **ஆம்** என்றால் நீங்கள் பின்வருவனவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்
DLA if you are under 66 or
Attandance allowance if you are over 66

Also advice available on
* WELFARE BENEFITS
* SOCIAL BENEFITS
*COUNCIL HOUSING APPLICATION RELATED MATTERS

Please phone us on
**0181 550 0908 or 0181 548 8803**

# கலசம் தரும் மற்றுமோர் அரிய சந்தர்ப்பம்!!!

**East Ham, Tooting, Wimbledon**
**Stoneleigh, Southhall**

ஆகிய பகுதிகளில்

# பகுதிநேர வேலை வாய்ப்பு

* NI not required

* Experience not necessary

Contact:

Assistant Administrator

**0181 220 6393**

# AKILAN ENTERPRISES LTD

AE

## அகிலன் எண்டர்பிரைசஸ்



வாரத்தில் ஏழு நாட்களும் காலை 10 மணியிலிருந்து மாலை 10 மணி வரை திறந்திருக்கும்

**மிருதங்கம், வீணை, வயலின் ஆர்மோனியம்**

**தெய்வச் சிலைகள்**
**தெய்வ அலங்காரப் பொருட்கள் பட்டுத் துணிகள்**
**பீடங்கள்**

**திருமணப் பொருட்கள், பட்டுச்சேலை, பட்டுவேட்டி**

சமய நூல்கள், இலக்கிய நூல்கள் சஞ்சிகைகள்

**274 High Street North**
**Manor Park**
**London E12 6SA**
**Tel: 0181 548 0033**
**Fax: 0181 548 0300**

தமிழ்த்திரைப் படங்கள்,தரமான Audio, Video, CD க்கள்

# ஞானக்கவிகளும் மோனச் சிலைகளும்

## தாயும் சேயும்



இறையன்பை எடைபோட்ட மெய்ஞ்ஞானியர் யாவரும் தாயன்பை முதலில் சொல் லிப் பார்த்திருக்கிறார்கள். அவர்கள் அறிந்த முத லன்பு தாயன்பு தானே! திருஞானசம்பந்தர் **தாயினும் நல்ல தலைவர்** என்கிறார். கருவூர்த்தேவர் தன் திருவி சைப்பாவில் **என்னைக் கற்பினிற் பெற்றெடுத்து எனக்கே முலைகள் தந்து அருளும் தாயினும் நல்ல முக்கணான்** என்று மகிழ்கிறார். திருமங்கை மன்னன் தன் பெரிய திருமொழியில் **பெற்றதாயினும் ஆயின செய்யும்** என வியக்கின்றார். இதே கருத்தை மணிவாசகரும் **பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து** எனச் சுட்டிக்காட்டியதுடன் நில்லாமல் பிறிதோர் இடத்தில்

**தாயாய் முலையைத் தருவானே**
**தாராதொழிந்தால் சவலையாய்**
**நாயேன் கழிந்து போவேனோ**
**நம்பியினித்தான் நல்குதியே**
**தாயே என்று உன்தாள் அடைந்தேன்.**

என் தாயாக வந்து நீ ஞானப்பால் ஊட்டாவிட்டால் நான் தாய்ப்பால் குடிக்காத குழந்தைபோல் மெலிந்து போவேன் தாய் என உன்னடி அடைந்தேன் என்கின்றார். இறை வனையே தன்தாயாக வந்து தன்னை ஆட்கொள்ளச் சொல்லும் அவரின் திறமை வியக்கத்தக் கது. தாய்க்கும் சேய்க்கும் உள்ள உறவு கருவிலே உருவான தொன்றல்லவா? தாயன்புக்கு ஈடு ஏது? சோமஸ்கந்த மூர்த்தத்தைப் பற்றிக் கந்தபுராணம்

**ஏலவார் குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும்**
**பாலனாகிய குமரவேள் நடுவுறும் பான்மை**
**ஞாலமேலுறும் இரவொடு பகலுக்கும் நடுவாய்**
**மாலையான தொன்று அழிவின்றி வைகுமாறு ஒக்கும்**

எனச் சித்தரிக்கின்றது. அதாவது அம்மைக்கும் அப்பனுக்கும் நடுவில் கந்தன் வீற்றிருப்பது இரவுக்கும் பகலுக்கும் நடுவில் உள்ள சந்தியாகாலம் போல இருந்ததாம். இப்படிச் சிவனுக்கும் பார்வதிக்கும் இடையேதான் கந்தனைப் பார்க்க முடியும். கந்தனின் வடிவங்களைப்பற்றி கூறும் குமாரதந்திரம், ஸ்ரீதத்வநிதி போன்ற ஆகமங்களிலும் உமைக்கும் சிவனுக்கும் இடையே குழந்தைக் கந்தன் இருக்கும் வடிவமே சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படத்தில் இருப்பது போன்று தாயும் சேயும் ( தாய் - உமை, சேய் - கந்தன்) மட்டும் இருக்கும் வடிவம் ஆகமங்களில் கூறப்படாத இந்த அற்புதப் படைப்பை பல்லவனீச்சரத்தில் பார்க்கலாம்.(பல்லவனீச்சரம் காவிரிப்பூம்பட்டணத்தில் உள்ள பாடல் பெற்ற தலங்களில் ஒன்று.)கௌரியும், கௌரிமைந்தனும் இடக்கை மடிமீது வைத்து வலக்கை மலர் ஏந்தி அமர்ந்திருக்கும் பாங்கு மனங்களைக் கொள்ளை கொள்ளும். மெய்ஞ்ஞானியர் போற்றும் தாயன்பை எடுத்துக் காட்டவே சிற்பி இதனை வடித்தனன் போலும். மணிவாசகர் கூறிய **தாயே என்று உன் தாள் அடைந்தேன்** எனும் மணிவாக்குக்கு இலக்கணமாக இவ்வடிவு மிளிர்கின்றது.

**-தமிழரசி-**


# AARABEE CENTRE

*BOOKSHOP AT BHARATIYA VIDYA BHAVAN*

** ORNAMENTS * SAREES*
** MUSICAL INSTRUMENTS*

***உன்னதமான கலைஞர்களின் பாட்டு, வாத்திய இசை CD க்கள், இசை நாட்டியம் பல்வேறு கலை நூல்கள்***

We also Buy & Sell Foreign Currencies and remit to Overseas
Contact: 0171 402 4668

ஆரபி

Rare ClassicalCDs, Audios & Videos (Vocal & Insrumental)

**Bharatiya Vidya Bhavan**
**4a, Castletown Road,**
**West Kensington,**
**London W14 9HQ**

**0171 258 3924**

புதிய பழைய
தமிழ்த் திரைப்படங்கள்
வாடகைக்கும்
விற்பனைக்கும்
நாடவேண்டிய
ஒரே இடம்

200 க்கும் அதிகமான
தெரிவுகள்
Audio Cassettes from
£1.50 to £2.00
புதிய பழைய திரைப்படப்
பாடல்கள், பட்டிமண்றம்–
நாதஸ்வரம்

தமிழ்த்திரைப் பாடல்கள்
அடங்கிய
3Hrs VideoCassettes
from £ 3.50
மட்டுமே

ஆலயங்களுக்குத்
தேவையான
பொருட்கள்
திருமணம் மற்றும்
விசேடங்களுக்குத்
தேவையான
பொருட்கள்

# VANEE'S AGENCIES

-SINCE 1979-

ஐரோப்பாவில் முதற் தமிழ்க் கடை
16 ஆவது ஆண்டு நிறைவு
மலிவு விற்பனை

அன்பளிப்புப்
பொருட்கள்
குத்துவிளக்கு,
நிறைகுடம்,
சுவாமிப்படங்கள்,
சிலைகள்

யாழ்ப்பாண
பல்கலைக்கழக
வெளியீடுகள், அரிச்
சுவடிகள், ஈழத்து இந்திய
தமிழ் நூல்கள்

317 HIGH STREET NORTH
MANORPARK
LONDON E12 6SL
TEL: 0181 471 8366 FAX: 0181 472 0599

We do
catering for any
function. Chairs
available
for rent

# MARKANDAN & CO

## SOLICITORS

*Empowered to Administer Oaths*

LEGAL AID

LEGAL AID

**THAMIL HOUSE**
**720 ROMFORD ROAD, MANOR PARK**
**LONDON E12 6BT**

## M. MARKANDAN *LLB*

* All aspects of immigration matters to appeals to European court of human rights * All types of conveyancing* Litigation * All courts civil/criminal * Landlords/Tenant matters * Matrimonial * Police station advice * All D.S.S and housing benefit matters *Free advice for 15 minutes on the first attendance

TEL : 0181 514 8188 FAX : 0181 514 8303

# ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள்

சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள்

நவக்கிரகங்களிலே ராகு கேது இரண்டும் விசித்திரமானவை. வான மண்டலத்தில் நிழற் கிரகங்களாகத் திகழ்ந்து இடப்பக்கமாகச் சுற்றி வந்து நல்ல தீய பலன்களைச் சுலபமாகவும் கடுமையாகவும் தருபவை இவை. ஆயினும் ராகு கேதுக்களுக்கிடையே திசை புத்தி காலத்திற் பெற்ற நல்ல பலன்களை மற்ற எந்தத் திசையிலும் மாற்ற முடியாது எனச் சோதிட நூல்கள் கூறுகின்றன.தற்போது ராகு சிம்மராசிக்கும் கேது கும்பராசிக்கும் பெயர்ச்சி அடைந்திருப்பதினால் உங்களுடைய ராசிக்கு ஏற்பப் பலன்களை படித்துத் தெரிந்து கொள்வது நலம் பயக்கும்.

ராகு தோஷ பரிகாரத்திற்குத் துர்க்கையையும் கேது தோஷ பரிகாரத்திற்கு விநாயகரையும் வழிபடுவது மிகவும் நல்லது.

## மேஷம்

**5 இல் ராகுவின் பலன்**

கடந்த காலத்தில் 6ஆம் இடத்தில் இருந்த ராகு தற்போது 5ஆம் இடத்தில் அதாவது சிம்மராசிக்கு வந்துள்ளார். பகையாகிற சூரியனின் வீட்டிற்கு வந்துள்ள ராகுவால் உறவினர்களுடன் சுமூகமான உறவு ஏற்படும். சூதாட்ட மூலமாகப் பணவரவு இருந்தாலும் வருவது நிலைத்து நிற்காது. உத்தியோக இடங்களில் மதிப்பு உயரும். சரியான வேளைக்கு உணவு கிடைப்பது கஷ்டம். கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்படும். நண்பர்களுடன் கவனமாகப் பழகுவது நல்லது. ஆண்டின் இறுதியிற் தனலாபம், வீடு, வாகன சுகம் உண்டு.

**11 இல் கேதுவின் பலன்.**

11ஆம் இடத்திற்கு வந்துள்ள கேதுவினால் நினைத்த காரியங்கள் நடைபெறும். தொட்டது பொன்னாகும். நோய்கள் நீங்கி நல்ல சுகம் வரும். எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். சிலர் வெளிநாட்டில் நிரந்தர வாசிகளாவார்கள். உத்தியோகமும் கிடைக்கும். பிரயாணங்களிற் செலவு அதிகமானாலும் காரிய வெற்றியும் மனதிற்கு மகிழ்ச்சியும் ஏற்படும்.

## ரிஷபம்

**4 இல் ராகுவின் பலன்.**

இதுவரை தங்களைக் கஷ்டப்படுத்திய ராகு சிறிது ஆறுதல் அளிப்பார். ஆயினும் மனைவி, சகோதரி ஆகியோராற் செலவு ஏற்படும். பணவரவு இருந்தாலும் கையிற் தங்காது. வெளியூர்ப் பயணங்களும் புதுமனிதர் சந்திப்பும் ஏற்படும். சிலர் யாத்திரை போவார்கள். கணவன், மனைவி உறவில் அன்பு கூடும். தாயார் உடல் நலம் பாதிக்கும். வாலிபப் பருவத்தினர் கவனமாக இருப்பது நல்லது.

**10 இல் கேதுவின் பலன்.**

பெரிய மனிதர்கள் சந்திப்பு மனதிற்கு இதம் தரும். தொழிற் துறையிற் திடீர்த் திருப்பங்கள் நிகழும். சில சமயங்களில் மதில் மேற் பூனையாகத் தடுமாறுவீர்கள். உறவினர்கள் உதவி புரிவார்கள். சிலருக்குப் படிப்பிற் குழப்பம் உண்டாகும். வெளியூர்ப் பயணங்களில் ஏமாற்றப்படுவார்கள். கணபதியை வழிபட்டுக் காரிய வெற்றி பெறலாம்.

## மிதுனம்

**3 இல் ராகுவின் பலன்**

உங்கள் ராசிக்கு 3இல் வந்துள்ள ராகுவாற் சகோதரர்களாற் தொல்லையும் பொருள் இழப்பும் உண்டாகும். வீண் அலைச்சலும் மனதிற் படபடப்பும் ஏற்படும். தொழிலில் மந்த நிலைமை ஏற்படும். மனைவிக்கு உடல் நலம் பாதிக்கும். பணத் தட்டுப்பாடு அதிகமாகும். பிறரிடம் கையேந்தும் நிலைமை உண்டு. படிப்பில் முன்னேற்றம் உண்டு. விளையாட்டில் ஈடுபடுவது நல்லது.

**9 இல் கேதுவின் பலன்.**

கேது 9ஆம் இடத்திற்கு வரும்போது செய்கின்ற தொழிலில், உத்தியோகத்திற் பெரிய நன்மைகள் ஏற்படும். எதிர்பாராதவகையில் உறவினர்களுடைய சொத்து, பணம் கிடைக்கலாம். தாய் தந்தையர்களால் மருத்துவச் செலவு ஏற்படும். பிரயாணங்களிற் புதிய

நட்புக் கிடைக்கும். உதவியும் ஏற்படும். தெய்வ தரிசனமும், சுகபோக வாழ்வும் கிடைக்க வழியுண்டு.

## கடகம்

**2 இல் ராகுவின் பலன்**

ராகு உங்கள் ராசிக்கு 2இல் பகையாக வந்தாலும் புகழ் ஓங்கும். செல்வாக்கு உயரும். பராட்டும், கௌரவமும் கிட்டும். தானதர்மங்கள் நிறையச் செய் வார்கள். புண்ணிய தீர்த்த யாத்திரை செல்வார்கள். கணவன், மனைவிக்கிடையிலான உறவு சுமூகமாகத் தெரிந்தாலும் 9, 8 ஆரம்பத்திற் புதுப்புதுப் பிரச னைகள் உருவாகும். அப்போதி லிருந்தே கவனமாக இருப்பது நல்லது.

**8 இல் கேதுவின் பலன்**

கேது 8ஆம் இடத்திற்கு வரும் போது ஆண் அல்லது பெண் ணினாற் கெட்ட பெயர் வரும். மானம் போகுதலும் ஏற்படும். உறவினர் நண்பர்களிடையே விரோதம் ஏற்பட்டு நீதி மன்றம் போகவேண்டி வரலாம். எச்சரிக் கையாக இல்லாவிடில் அங்கவீனம் கூட ஏற்படலாம். வாகனப் போக்கு வரத்திற் கவனம் தேவை. ஆயினும் நெருங்கிய ஒருவரால் அடிக்கடி ஆறுதல் கிடைக்கும்

## சிம்மம்

**1 இல் ராகு பலன்**

உங்கள் ராசிக்கு வந்துள்ள ராகுவாற், பிரச்சனைகளே அதிகமாகும். உறவினர் நண்பர்களுடன் சச்சரவு உண்டாகும். தொடங்கும் எந்தக்காரியமும் நிறைவேறுவது கஷ்டம். அஷ்டமத்துச் சனியினால் அவதிப்படும் தங்களுக்கு ராகுவின் கஷ்டம் அதிகமாகவே தெரியும். சிலருக்குத் துக்ககரமான சம்பவங்களும் நடைபெறலாம். ஆயினும் தக்க சமயத்தில் உதவி கிடைக்கும். பிரயாணத்திற் கவனம் தேவை.

**7இல் கேதுவின் பலன்.**

கேது ஏழாமிடத்திற்கு வரும்போது கல்யாண காரியங்கள் ஏற்பட்டுத் தடைப்படும். மனதில் வெறுப்புத் தோன்றும். உஷ்ண வியாதியும், விஷ ஜந்துக்களாற் தீங்கும் உண்டாகும். மனதில் ஆத்திரமடைந்து எல்லோரிடமும் விரோதப்படுவார்கள். தொழிலில் நல்ல பெயர் கெடும். புதிய சினேகம் ஆபத்தானது. தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவி உறவில் விரிசல் ஏற்படும். கவனம்.

## கன்னி

**12 இல் ராகுவின் பலன்**

உங்கள் ராசியை விட்டுச் சென்ற ராகுவாற் சிறிது நிம்மதி தெரிந்தாலும் முழுவதும் விடாது. செலவுகள் அதிகமாகும். எதற்கெடுத்தாலும் கோபப்படுவார்கள். தங்களுக்குத் தற்போது தேவை பொறுமையும் நிதானமும் தான். ஆண்டு இறுதியில் திடீர் மாற்றங்கள் உண்டு. வேலைவாய்ப்பு உண்டாகும். செய்தொழிலில் முன்னேற்றம் உண்டு. கணவன் மனைவி உறவு சுகப்படும். பிரயாணத்திற் கவனம் தேவை.

**6 இல் கேதுவின் பலன்**

6 இல் கேதுவினால் மனதில் அசாத்தியத் துணிச்சல் வரும். செய்தொழிலில் அதிசய முன்னேற்றம் கிடைக்கும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். தொடங்குகின்ற காரியங்களிற் படிப்படியே வெற்றி கிடைத்து வரும். இடையே சிலர் தங்களைப் பயன்படுத்தித் தாங்கள் முன்னேறுவார்கள். கணவன், மனைவி உறவிற் சிறிய பிளவு ஏற்பட்டுப் பின்பு சரியாகும்.

## துலாம்

**11 இல் ராகுவின் பலன்**

உங்கள் ராசிக்கு லாபஸ்தானத்திற்குச் சென்றுள்ள ராகுவால் மிகச்சிறந்த பலன்கள் நடைபெறும். இது நாள்வரை, கஷ்டப்பட்டதிற்கு நல்ல பயன் கிடைக்கும். சமூகத்தில் மரியாதையும், அந்தஸ்தும் ஏற்படும். உத்தியோக உயர்வும் தொழிலில் லாபமும் கிடைக்கும். உறவினர்கள் அன்பு செலுத்துவார்கள். சிலருக்க உடல் நலம் பாதிக்கப்படலாம். கவனம் தேவை. பிரயாணத்தாற் செலவு உண்டு.

**5 இல் கேதுவின் பலன்.**

5 இல் கேது வந்து தங்களைக் கசக்கிப் பிழிகிறார். வாழ்க்கை சீராகச் சென்று கொண்டிருந்தாலும் அனாவசியப் பிரசனைகளால் அலைக்கழிக்கப் படுவார்கள். மனதிற்கு வேதனை அளிக்கக்கூடிய சம்பவங்கள் நிகழலாம். பிரயாணத்தாலும் கஷ்டங்கள் கூடும். நெருங்கிய ஒருவரால் ஏமாற்றப்படுவார்கள். உணவிருந்தும் சாப்பிட முடியாத நிலை ஏற்படும்.

## விருச்சிகம்

**10 இல் ராகுவின் பலன்**

உங்கள் ராசிக்குப் 10இல் வந்துள்ள ராகுபகவானாற் பிரபலமானவர்களைச் சந்திப்பீர்கள். புதிய தொடர்புகள் ஏற்படும். சுபகாரியம் நடத்த வேண்டிய பொறுப்பு உண்டு. செய்தொழிலிற் பிரச்சனை அதிகமாக இருந்தாலும் முடிவு நினைத்தபடி அமையும். பிறரை ஏமாற்றுபவர்கள் மாட்டிக்கொள்வார்கள். எதிலும் எச்சரிக்கையாக இருந்து கொள்ளவும். வாகனத்தாற் செலவும் பிரச்சனையும் ஏற்படும். கடிதத்தில் நல்ல செய்தி வரும்.

**4 இல் கேதுவின் பலன்**

உங்கள் ராசிக்கு 4இல் கேது வந்திருக்கும் இச்சமயத்தில் எதிர்பாராத பிரச்சனைகளைச் சந்திக்க நேரிடும். பொருளாதாரத் தட்டுப்பாடும் கடன் தொல்லையும் தலைக்கு மேற் போகும். வீண் அலைச்சலும், வீண் பழியும் ஏற்படும். ஆனாற் கணவன், மனைவி உறவு அழுத்தமாக உள்ளதால் எதையும் தைரியமாக எதிர்கொள்வீர்கள். நல்ல சமயத்திற் பிள்ளைகள் உதவி செய்வார்கள். பெற்றோர் உடல் நலப் பாதிப்பு உண்டு.

## தனுசு

**9 இல் ராகுவின் பலன்**

9ஆம் இடத்திற்கு வந்துள்ள ராகுவாற் பிறர்க்காக நீங்கள் கஷ்டப்படவேண்டிவரும். உதவி செய்வதிற் கவனம் தேவை. வீண் பழிக்கும், மேலதிகாரிகளின் கோபத்திற்கும் ஆளாக நேரிடும். பெற்றோர் உடல் நிலையை நன்கு கவனிக்கவும். கணவன் மனைவி உறவு சுமூகமாக இருந்து வரும். கல்வியில் மந்த நிலைமை ஏற்படும். சாப்பாட்டிற் கவனம் தேவை.

**3 இல் கேதுவின் பலன்**

கேது 3ஆம் இடத்திற்கு வந்த சமயத்தில் நல்ல காலம் உதயமாகும். இதுவரை பட்ட கஷ்டங்கள் நீங்கித் தெளிவும், நிம்மதியும் பிறக்கும். நோய்கள் நீங்கிச் சுகம் வரும். ஆனால் வரவுக்கு மேற் செலவு ஏற்படும். தொழிலில் மேன்மை உண்டு. பண விஷயத்தில் மிக எச்சரிக்கையாக இருப்பது நல்லது. அலட்சியம் செய்தால் வீண் பழி சுமப்பீர்கள். மேலதிகாரிகள், உறவினர்கள் தக்க சமயத்தில் உதவுவார்கள்.

## மகரம்

**8 இல் ராகுவின் பலன்**

எந்தக் கிரகமும் 8இல் வந்தாற் கஷ்டம் தான். ராகு மட்டும் மாறுமா? எதிலும் பிரச்சனைகள் தலை தூக்கும். எதிரிகளின் சூழ்ச்சிக்குப் பலியாவீர்கள். பெண் அல்லது ஆணால் அவமானம் உண்டாகும். தலை குனிய வேண்டிவரும். தெய்வபக்தி தான் தெளிவைத் தரும். உறவினர்களாலும், நண்பர்களாலும் பொருள் இழப்பும் மனவேதனையும் ஏற்படும். சிலருக்குப் பணப்புழக்கம் தாராளமாக இருந்து வரும். எதிலும் கவனம் தேவை.

**2 இல் கேதுவின் பலன்**

2இல் வந்துள்ள கேதுவால் உற்சாகம் தலைதூக்கும். செலவு செய்து சுகம் காணுவீர்கள். குடும்பத்தில் உற்சாகமின்மையும், கவலையும் நிலவும். புதிய நண்பர்களை நம்பி மோசம் போக வேண்டாம். ராகு 8இல் இருப்பதால் இருப்பதை வைத்துக் கவனமாகப் பார்த்துக் கொள்வது நல்லது. வெளியூர்ப் பிரயாணமும் தொழிலில் மாற்றமும் உண்டு. கணவன் மனைவி உறவிலும் கவனம் தேவை.

## கும்பம்

**7 இல் ராகுவின் பலன்**

7இல் வந்துள்ள ராகுவாற் குடும்பப்பிரிவு உண டாகும். நோய், வியாதி உண்டாகி உடம்பை மிகவும் வருத்தும். மருந்து சாப்பிடுவதிற் கவனம் தேவை. வாகனங்களிற் கவனமாகச் சென்று விபத்தைத் தவிர்க்கவும். புதிய உறவாற் குடும்ப அமைதி கெடும். காதலர்களும் கவனமாக இருக்கவும். பிரயாணத்திற் பொருள் இழப்பும், உடல்நலப் பாதிப்பும் உண்டாகும்.

தொழிலில் மேன்மை உண்டு. திடீர்ப் பணவரவும் ஏற்படும்.

**1 இல் கேதுவின் பலன்**

உங்களுடைய ராசிக்குக் கேது வரும்போது நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். ஆரம்பத்திற் குடும்பத்தில் வறுமையும், துன்பமும், கவலையும் நிலவும். குடும்பத்தில் ஒருவர் மிகவும் நோய்வாய்ப்படுவார். அல்லது ஏதாவது விபத்திற் சிக்கி உயிர் தப்புவார். தொழிலில் மிக மந்த நிலை நிலவும். பிற்பகுதியிற் பலரின் உதவி கிடைக்கும். பிரயாணத்தால் மகிழ்ச்சியும் முக்கிய நபர் சந்திப்பும் கிடைக்கும்.

## மீனம்

**6 இல் ராகுவின் பலன்**

தங்கள் ராசிக்கு 6ஆம் இடத்தில் வந்துள்ள ராகுவால் மிகவும் உற்சாகமாகத் திகழ்வீர்கள். வேடிக்கை, விளையாட்டுக்களில் மனம் ஈடுபடும். குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் ஏற்படும். பெரியோர் சந்திப்பும், வெளியூர்ப் பயணமும் மனதிற்கு இதம் தரும். எடுத்தகாரியமனைத்தும் வெற்றிகரமாக நிறைவேறும். காதலிலும், வழக்கு நடவடிக்கை களிலும் வெற்றி உண்டு. ஆண்டு இறுதியில் திருமணம் கைகூடும்.

**12 இல் கேதுவின் பலன்.**

12இல் கேதுவின் பலன்கள் வீண் செலவுகளைக் கொண்டு வரும். தன்வாயாற் கெட்டு வீண் பழி சுமப்பீர்கள். கொடுக்கல், வாங்கல்களில் மாட்டிக் கொண்டு முழிப்பீர்கள். வேறு இனமக்களாற் சிறிது உதவி கிடைக்கும். தொழிலில் மந்த நிலைமை தெரிந்தாலும் பணப்புழக்கம் தாராளமாக இருந்து வரும். கணவன், மனைவி உறவிற் கசப்பு ஏற்பட்டுப் பின் தீரும். எதிலும் கவனம் தேவை.

★ ★

## குறித்து வைக்க வேண்டிய தினங்கள்

| | |
|---|---|
| 03-08-97 | ஈஸ்ற்காம் முருகன் தேர் |
| 04-08-97 | ஈஸ்ற்காம் முருகன் தீர்த்தம் |
| 05-08-97 | ஆடிச் செவ்வாய் 3 |
| 06-08-97 | ஆடிப்பூரம் |
| 07-08-97 | நாக சதுர்த்தி விரதம் |
| 08-08-97 | நல்லூர் கந்தசுவாமி கொடி |
| 09-08-97 | ஷஷ்டி விரதம் |
| 12-08-97 | ஆடிச் செவ்வாய் 4 |
| 14-08-97 | ஏகாதசி விரதம் |
| 15-08-97 | பிரதோஷ விரதம், வரலஷ்மி விரதம் |
| 17-08-97 | ஆவணி மாதப் பிறப்பு, ஆவணி ஞாயிறு 1 |
| 21-08-97 | சங்கட சதுர்த்தி |
| 23-08-97 | ஷஷ்டி விரதம் |
| 24-08-97 | ஆவணி ஞாயிறு 2, கார்த்திகை விரதம் |
| 25-08-97 | ஜன்மாஷ்டமி, கிருஷ்ண ஜயந்தி |
| 28-08-97 | ஏகாதசி விரதம் |
| 30-08-97 | சனிப் பிரதோஷவிரதம் |
| 31-08-97 | ஆவணி ஞாயிறு 3, நல்லூர் கந்தசுவாமி தேர் |
| 01-09-97 | அமாவாசை விரதம், நல்லூர் தீர்த்தம் |
| 02-09-97 | நல்லூர் கந்தசுவாமி பூங்காவனம். |
| 03-09-97 | தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கொடி |
| 05-09-97 | விநாயக சதுர்த்தி விரதம். |
| 07-09-97 | ஆவணி ஞாயிறு 4, ஷஷ்டி விரதம் |
| 10-09-97 | ஆவணி மூலம் |
| 12-09-97 | ஏகாதசி விரதம் |
| 13-09-97 | தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேர் |
| 14-09-97 | ஆவணி ஞாயிறு 5, பிரதோஷ விரதம் |
| 15-09-97 | நடேஷர் அபிஷேகம். |
| 16-09-97 | பூரணை விரதம் |
| 17-09-97 | புரட்டாதி மாதப் பிறப்பு |
| 19-09-97 | சங்கட சதுர்த்தி |
| 20-09-97 | புரட்டாதிச் சனி 1 |
| 21-09-97 | கார்த்திகை விரதம் |
| 27-09-97 | புரட்டாதிச் சனி 2, ஏகாதசி விரதம் |
| 29-09-97 | கேதாரேஸ்வர விரதம் |
| 01-10-97 | அமாவாசை விரதம் |
| 02-10-97 | நவராத்திரி விரதம் |
| 04-10-97 | புரட்டாதிச் சனி 3 |
| 05-10-97 | சதுர்த்தி விரதம் |
| 07-10-97 | ஷஷ்டி விரதம் |
| 08-10-97 | சரஸ்வதி பூசை ஆரம்பம் |
| 10-10-97 | சரஸ்வதி பூசை, மகா நவமி |
| 11-10-97 | விஜய தசமி, கேதார கௌரி விரதம் |

தொகுப்பு : அமுதா

# முருகனை வணங்குங்கள்

தொகுப்பு - V.E. பழனியப்பன் -

## வேல்:

வீரவேல், வெற்றிவேல், ஞானவேல்

வேல் என்பது முருகனின் ஞான சக்தியாகும். வேல் என்றால் வெல்வது என்று பொருள். ஞானம் என்ற சொல் தமிழில் அறிவு என வரும். அறிவுக்கு மூன்று இலக்கணங்கள் உண்டு. ஆழம், கூர்மை, அகலம் என்பனவாகும். வேலின் அடிப்பகுதி ஆழமாகவும் இடைப்பகுதி அகலமாகவும் நுனிப்பகுதி கூர்மையாகவும் இருப்பதைக் காணலாம். முருகன் திருவுருவத்திற்குப் பதிலாக வேலை வைத்தே வழிபடுதல் பண்டைக் காலம் தொட்டு இருந்துவரும் வழக்கமாகும்.

## வள்ளி - தெய்வயானை

திருமாலின் கண்களிலிருந்து தோன்றிய அமிர்தவல்லி சுந்தரவல்லி என்ற இருவரும் முருகனையே மணக்கவேண்டும் என்று தவம் இருந்தனர். அமிர்தவல்லி தேவலோகத்திலும் சுந்தரவல்லி பூலோகத்திலும் பின்னர் பிறந்தனர். அமிர்தவல்லி இந்திரன் மகளாகப் பிறந்து அவனது யானையான ஐராவதத்தினால் வளர்க்கப்பட்டதால் தெய்வயானை எனப் பெயர் பெற்றாள். சுந்தரவல்லி வள்ளி மலைச் சாரலில் பிறந்து வேடர்குலத் தலைவன் நம்பிராஜனால் வளர்க்கப்பட்டாள். இவர்கள் இருவரையும் முருகன் மணந்தார். செல்வத்தில் உதித்த தெய்வயானையையும் எளிய வேடர் குலத்தில் பிறந்த வள்ளியையும் தேவியராகப் பெற்று பக்குவமடையாத ஜீவனையும் இறைவன் சமமாகக் கருதி அருள் புரிகிறார் என்பதை உணர்த்துகிறார். இதன் தத்துவம் முருகப் பெருமான் வேலாகிய ஞான சக்தியால் அறத்தையும், இச்சா சக்தியான வள்ளியம்மையினால் பொருளையும் கிரியா சக்தியான தெய்வயானையினால் இன்பத்தையும் நல்கி வீடு என்கின்ற பேற்றை அளிப்பவர் என்பதாகும்.

## சேவலும் மயிலும்

சூரபத்மனின் உடலை முருகனின் வேல் பிளந்ததும் ஒரு பாதி சேவலாகவும் மறுபாதி மயிலாகவும் ஆயின. நான் என்கிற பாதியான அகங்காரமும் எனது என்கின்ற மற்றொரு பாதியான மமகாரமும் அடக்கப்பட்டதே சூரசம்காரத்தின் தத்துவ விளக்கமாகும்.

மயில் குகா என்று கத்துவதைக் கேட்டிருக்கலாம். சேவல் கொக்கரக்கோ என்று கூவும். கொக்கு என்றால் மாமரம் என்று பொருள் உண்டு. மாமரத்தை அறுத்தவர் முருகன். மாமரமாக நின்றவன் சூரன்.

சேவல் ( சேவற் கொடியோன்) பிரணவத்தை நாத வடிவமாக அளிக்கிறது. மயில் விந்து வடிவம். வேல் கலை. இவற்றுக்கெல்லாம் தலைவன் முருகன். அதனால்தான் நாதவிந்து கலாதீதநமோ என்கிறார் அருணகிரிநாதர்.

முருகவேள் குழந்தைகளுக்குப் பாலகனாகவும் இளைஞர்களுக்கு குமாரனாகவும் கலைஞர்களுக்கு ஆறுமுக அண்ணலாகவும், வீரர்களுக்குச் சேனாதிப தியாகவும் மந்திரோபதேசம் பெற்று வழிபட விரும்புபவர்களுக்கு ஞானபண்டிதனாகவும் இல்லற நிலையினருக்கு வள்ளி தெய்வயானை மணாள னாகவும் பற்றற்ற ஞானிகளுக்கு ஆண்டியாகவும் அவரவருக்கு ஏற்ற நிலையில் திருமுருகன் அருள்புரிகின்றார். முருகப் பெருமானை வணங்கு பவர்களது வாழ்வு என்றென்றும் மலர்ந்து மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

**அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்**
**நெஞ்சமதில் அஞ்சல் எனவேல்தோன்றும் - நெஞ்சில்**
**ஒருகால் நினைக்கையில் இருகாலும் தோன்றும்**
**முருகா என்று ஓதுவார் முன்**
**-திருமுருகாற்றுப்படை**


# திருக்கடையூர் மகா கும்பாபிஷேகம்

சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள்.

சைவ சமயமும் செந்தமிழும் செழித்தோங்குகின்ற தென்னாட்டில், சோழநாட்டின் கடலோரத் திருத்தலங்களில் மிகச் சிறப்பானது திருக்கடையூர் திருத்தலமாகும். ஊழி வெள்ளத்தில் மிதந்து வந்த அமுத கலசத்தைப் பிரம்மாவானவர் லிங்கமாக வைத்துப் பூசித்ததால் ஏற்பட்ட இறைவன் பெயர் அமிர்தகடேஸ்வரர். அழகிய தோற்றத்தோடு அண்டங்களை ஆளுகின்றவளாக இறைவி அபிராமி அம்பிகை. மிருகண்டு முனிவரின் குமாரராகிய மார்க்கண்டேயர் தன்னுடைய பதினாறாவது வயதில், விதி முடியும் நேரத்திற் சிவபூசை செய்து கொண்டிருந்தபோது எமன் எருமையில் வந்து பாசக் கயிற்றை வீச, கயிறு சிவலிங்கத்தையும் சேர்த்து இழுத்தது. பாச பந்தங்களைக் கடந்த பரமன் கோபங் கொண்டு மார்க்கண்டருக்காகக் காலனைச் சம்ஹாரம் செய்ததால் *காலசம்ஹார மூர்த்தி* இத் தலத்தில் மிகவும் விசேடமானது. மார்க்கண்டேயரோடு கங்கையில் இருந்து வந்த ஜாதிமுல்லைச் செடியே இத்தலத்தின் தலவிருட்சம். இச்செடி இன்னும் பூத்துக் குலுங்கி இறைவன் பூசையிற் பங்கேற்கிறது.

அநேக பக்தர்கள் தங்களுடைய பிறந்த அதே வருஷம், மாதம், நட்சத்திரம் சேர்கின்ற அறுபதாவது வயதில் இத் தலத்திற்கு வந்து பூசை ஹோமங்கள் செய்துகொண்டு **ஷஷ்டியப்ப பூர்த்தி** எனப்படும் மணிவிழாவைக் கொண்டாடுவது வழக்கமாக உள்ளது. இறைவன் காலனைக் கடிந்து மார்க்கண்டேயருக்குச் சிரஞ்சீவி பதம் அளித்த இத்தலத்தில் நீண்ட ஆயுளுக்காக வேண்டி வழிபாடு செய்வது மிகவும் உகந்தது.

இத் தலத்து அபிராமி அன்னை கருணையே வடிவானவள். இறைவனையே எப்போதும் மனதில் நினைந்து வழிபடும் சிவாசாரியார் ஒருவர் தியானத்தில் இருக்கும் போது வழிபட வந்த தஞ்சை மன்னன், இவரிடம் இன்றைக்கு என்ன திதி என வினவ, அன்னை அருளொளி முகத்தைத் தரிசிக்கும் அர்ச்சகர் பௌர்ணமி எனப் பதிலளித்தார். அமாவாசையைப்



பௌர்ணமி என்ற அவரை, நெருப்புக்கு மேலே தொங்கும் உறியில் நிறுத்தி, நிலவைக் காட்டி விடுதலை பெறுவீர் என்றான் அரசன்.

அர்ச்சகர் அன்னை அபிராமியை நினைந்து மனமுருகி அந்தாதி பாடி வேண்ட, இறைவியும் தனது காதணியாகிய தாடங்கத்தை வானில் வீசி, பௌர்ணமி நிலவைக் காட்டிப் பக்தரைக் காத்தனள். இன்று உலகவாழ் நமது மக்கள் அநுதினமும் பாராயணம் செய்யும் அபிராமி அந்தாதி பாடல்கள் இத்தலத்து அம்மை அபிராமியின் புகழ் நாமங்களே!

அறுபத்து மூன்று நாயன்மார்களில், தூபமிட்டு இறைவனை வழிபட்டு உய்ந்த குங்குலியக் கலய நாயனார் அவதரித்த தலமும் இதுவே. அப்பர், சுந்தரர், சம்பந்தர் இவர்களாற் பாடப்பெற்று உலகப் புகழ் வாய்ந்த இத் திருக்கோயில், சமயத் தொண்டில் முதன்னிலை வகிக்கும் தருமபுர ஆதீனத்தின்

நிருவாகத்திற் பரிபாலனம் செய்யப்படுகிறது. தற்போது இருபத்தாறாவது குருமகாசந்நிதானமாக விளங்கி வரும் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஏற்பாட்டில் இந்த ஆலய மகாகும்பாபிஷேகம் இவ்வாண்டு, மார்ச்மாதம் 26 ஆம் திகதி புதன்கிழமையன்று கோலாகலமாக நடந்தேறியது. தெய்வதரும காரியங்களில்

நல்ல மனதோடு வாரி வழங்குகின்ற திரு ஏ. சீ. முத்தையா செட்டியார் அவர்கள் போன்ற பலரின் பெரும் உதவிகளாலும் பக்தர்களின் ஒத்துழைப்பாலும் ஆலய கோபுர, மண்டப திருப்பணிகள் செவ்வனே நிறைவேற்றப்பட்டன. திருக்கடையூர் ஆலய தலைமை சிவாசாரியார் சிவஸ்ரீ விஸ்வநாத சிவாசாரியார் தலைமையில் நூற்றைம்பதுக்கும் அதிகமான சிவாசாரியார்கள் ஏழு தினங்கள் அதிவிசேடமான யாக பூசைகளை நடத்தினார்கள். மின் விளக்குகளாலும் மலர் அலங்காரங் களினாலும் தேவலோகம் போலக் காட்சியளித்த யாகசாலை மண்டபத்தில் வேதாகம பாராயணங்களும் திருமுறை பாமாலை ஓதலும் காதில் இனிமையாக ஒலித்துக் கொண்டிருந்தன. பிரபல நாதசுர கலைஞர்களின் நாத இசையோடு கலசங்கள் புறப்பட்டு, குறிப்பிட்ட சுபநேரத்தில் பக்தர்கள் அரோகரா முழங்க, வானில் கருடன் வட்டமிட, தங்கக் கலசங்களில் கும்பநீர் சொரியப்பட்டபோது மனதில் ஏற்பட்ட மகிழ்ச்சியையும் நிறைவையும் வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. அத் தருணத்தில் லண்டன் வாழ் நம்மக்களையும் மனதில் நினைந்து வழிபட்டு அபிராமி அன்னை உடனாய அமிர்தகடேசப் பெருமானை வணங்கி நிறைந்த உள்ளத்தோடு புறப்பட்டோம்.


ஆலமே அமுதமாக உண்டுவா னவர்க்களித்து
காலனை மார்க்கண்டர்காக் காய்ந்தனை அடியேர்க் கின்று
ஞாலநின் புகழேயாக வேண்டும்நான் மறைக ளேத்தும்
சீலமே ஆலவாயிற் சிவபெரு மானே என்றார்.

– பெரியபுராணம்

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வவடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமிலா
இனம்தரும் நல்லனஎல்லாம் தரும் அன்பர்என் பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமிகடைக் கண்களே

– அபிராமி அந்தாதி

# விம்பிள்டன் பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா



விநாயகன் என்றால் எல்லாவற்றுக்கும் மேலானவன் என்பது பொருளாகும். நாம் எக்காரியத்தைத் தொடங்கினாலும் விநாயகரை வணங்காமல் தொடங்குவதில்லை. விநாயகரது வழிபாடு எங்கள் கலாச்சாரத்தில் பிரிக்கமுடியாத அளவுக்கு இணைந்த ஒன்றாகும். சக்தி வாய்ந்த இவ் விநாயகப் பெருமானுக்கு விம்பிள்டனில் ஆலயம் எடுத்திருப்பது சகலரும் அறிந்ததே. முதல் முறையாக 10ம் திகதி ஞாயிற்றுக் கிழமையன்று எங்கள் விநாயகப் பெருமான் தேரேறித் தன்பக்தர்களுக்குக் அருள் பாலிக்கவுள்ளார். கலசம் பத்திரிகை தன் வாசகர்களோடு சேர்ந்து, சகலரும் விநாயகப் பெருமானது அருள் பெற்றேகுமாறு வேண்டிக் கொள்கின்றது. இம் மஹோற்சவம் சிறப்புற நடைபெற்றேக சகலருக்கும் பெருமானது அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

*கலசப்பத்திரிகை ஆசிரியர்களும், வாசகர்களும்*

6 Kumars Silk House



எம்மிடம், திருமண
கூறைப்புடவைகள், பனாரஸ்,
காஞ் சிபுரம் பட்டுப் புடவைகள்
அண்மையில் வெளியான
முதலாந்தர மைசூர் புடவைகள்
மற்றும் றெடிமேற் சட்டைகள்,
பாவாடைகள்,
தங்கமுலாம் பூசப்பட்ட நகைகள்,
பரதநாட் டிய நகைகள்,
பட்டு வேட்டி, நூல்வேட்டி,
சர்வாணி, குருத்தா,
சிறுவர்களுக்கான றெடிமேற்
ஆடைகள் யாவும் கிடைக்கும்

6 Kumars MINI SUPERMARKET

இலங்கை இந்திய
உணவுப்பொருட்கள், எவர்சில்வர்
பாத்திரங்கள், சஞ்சிகைகள் மற்றும்
பலவற்றை நியாயவிலையில்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

285, 287 High Street North,
Manor Park, London E12 6SL
Tel/Fax: 0181 471 5742,
0181 471 3707


## தவறுக்கு வருந்துகின்றோம்!!

* கலசம் 18 இல ( சித்திரை–வைகாசி–ஆனி 1997 ) வெளிவந்த The Mystery of Individuality (Page 30) என்னும் கட்டுரை திருமதி கமலபாஸ்கரன் அவர்களால் எழுதப்பட்டது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

* பக்கம் 39, கலசம் 18 இல் சைவ முன்னேற்றச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பட்டியலில் திருமதி. T. யோகரட்ணம் அவர்களது பெயரையும் இணைத்துக் கொள்ளுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

## கலசம் சந்தாப் படிவம்

New/ Renewal

அன்புடையீர்

கலசம் சஞ்சிகையைத் தொடர்ந்து இரண்டு வருடங்களுக்குப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன். இத்துடன் அதற்கான (பவுண்கள்) பெறுமதியான காசோலையை அனுப்பி வைக்கின்றேன்.

Name:.......................................
Address:....................................
...............................................
...............................................

Subscription for 2 years:
UK - £10.00 only
Europe- £14.00
Others- £22.00

No Stamp Needed-We Pay the Postage:
KALASAM
FREEPOST
3 THE ORCHARD
WICKFORD
ESSEX, SS12 9BR.

# ராசம் சில்க்ஸ்

# RASAM SILKS



## தேர்த் திருவிழாக் கவிதை

வண்ணத்தேரோடும் முருகா வலம் வருகின்றாயோ– மக்கள்
எண்ணத்தேரோடி ஈஸ்ற்காம் சுற்றி வருகின்றாயோ–பக்தர்கள்
பண்ணிசைத்துப்பாடி மனம்உருகி உளம்வேண்டிப் பின்தொடர– என்றும்
திண்ணத்து வீற்றிருந்து தினம் காத்தவனே வருவாயே வலம் என்றும்.

**3ம் ஆண்டு நிறைவு காணும் அமோக மலிவு விற்பனை**

மங்கல டிசைன் கூறைகள், காஸ்மீர், பனாரஸ் சற்றின் டிசைன் சில்க், அபூர்வா, கோலம், றோஜா, றங்கோலி, சுமங்கலிக்கூறைகள் (Latest)Staingard Gowry-Gayatri Party Sarees, காஞ்சிபுரம், ஆந்திராசில்க்...

பரதநாட்டிய உடைகள், சலங்கை, சல்லடி

**மணமகனுக்கு**

பட்டுவேட்டி, மாறுகரைவேட்டி ஊழவவழமெ வேட்டி, சர்வாணி, தலைப்பாகை, உத்தரியம்

**மணமகளுக்கு**

கூறைகள் முதல், மேக்கப், பூமாலைகள், Photo, Video எடுத்தல், பிளவுஸ் தைத்தல் சாப்பாட்டு ஒழுங்குகள்

தொடர்புகட்கு

**BALA**

2ND RIGHT FROM BURGES ROAD , OFF FROM BARKING ROAD

**115 Altmore Avenue**
**East Ham London E6**
**Tel: 0181 552 6060**


Indian Musical Instruments
தரமான வாத்தியக் கருவிகளைப் பெற்றுக் கொள்ள நீங்கள்
நேரில் வாருங்கள் அல்லது தபாலில் தொடர்பு கொள்ளுங்கள்.
7 DAYS A WEEK, 11.00AM TO 7.00PM.
JAS Musicals Ltd
108A The Broadway, Southall Middx. UB1 1QF U.K. Tel: 0181 574 2686 Fax: 0181 571 7445


# GLEN CARRIERS LIMITED

14 Allied Way, Off Warple Way, Acton London W3 0RQ
Tel: 0181 740 8379/ 0181 749 0595
Fax: 0181 740 4229  Telex: 929657 Glenca G

* SHIPPING
* AIRFREIGHT
* TRAVEL

ATOL 74395

Main Agents for Airlanka



**UNACCOMPANIED BAGGAGE**
**PERSONAL EFFECTS**
**HOUSEHOLD GOODS VEHICLES, MACHINERY ETC**

TO COLOMBO AND OTHER WORLDWIDE DESTINATIONS

**உங்கள் விமானப் பயண ஒழுங்குகளுக்கும், உங்களின் பொருட்களை இலங்கைக்கு அனுப்புவதற்கும், குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவையினைப் பெறுவதற்கும் சிறந்த ஸ்தாபனம்.**

நியாய விலைக்கு இலண்டனில் ஒரே தங்கமாளிகை

# Raju Pattni & Son

தமிழர்கள் விரும்பிச் செல்லும் ஒரே தங்க மாளிகை



**We specialise in 22CT. Gold & Diamond Jewellery**
**Tax Free For Overseas Visitors**

தமிழ் மக்களின் நம்பிக்கையும் நன்மதிப்பும் பெற்ற, நகை வியாபாரத்தில் முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்.

அழகான வண்ண வண்ண உத்தரவாதமுள்ள 22 கரட் தங்கத்திலான தாலிக்கொடிகள், நெக்கிலஸ்கள், மனதைக் கொள்ளை கொள்ளும் வண்ணங்களில் அமைந்த அட்டியல் வகைகள், பதக்கம் சங்கிலிகள், அழகான டிசைன்களில் கண்களைப் பறிக்கும் தங்க வளையல்கள், சங்கிலிகள் இவை மாத்திரமா? பென்ரன்கள், தோடுகள், இரத்தினக் கற்கள் பதித்த மோதிரங்கள் மற்றும் அனைத்துத் தேவைகளுக்கும் நாடவேண்டிய ஒரேயொரு நகை மாளிகை.



# ராஜு பட்னி அன் சன்



**58 - 60 Ealing Road, Wembley,**
**Middx HA0 4TQ**

**Tel: 0181 903 6677, 0181 902 0577, Fax: 0181 903 4887**

பொன்னுருக்குவதற்கு ஏற்ற வசதிகளுமுண்டு.

£2000 க்கு மேல் நகை வாங்கும் உங்களுக்கு £100 நன்கொடைச் சீட்டை இலவசமாக வழங்கக் காத்திருக்கின்றார்கள் ராஜபட்னி அன் சன் நகை மாளிகையினர்

இன்றே குடும்பத்துடன் விஜயம் செய்யுங்கள்.

சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் அச்சமைப்பும் வடிவமைப்பும் செய்யப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 0181 646 2885)
இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 03. 8. 97 அன்று வெளியிடப்பட்டது.